ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. No. M. 4642.

திராவிட நாடு

மலர் 3. 21—1—45 இதழ் 44.

பண்டைத் தமிழர்.

—:(o):—

மேனியில் மணியும் பதக்கமும் மின்னிட
வாழ்ந்தவர் நந்தமிழர்—இந்த
மேதினியெங்கும் அலைகடல்மேவிய
வாணிபர் நந்தமிழர்!
போரிற்சிறந்து வரிப்புலிமருப்பு
புனைந்தவர் நந்தமிழர்—புகழ்
பூவையர்க்கன்பு இணக்கம்புரிந்து
பிணைந்தவர் நந்தமிழர்!
ஆவியிறும்வரை மானவீரமுடன்
வாழ்ந்தவர் நந்தமிழர்—உயர்
ஆளியாசன மீதினில் செங்கோல்
காத்தவர் நந்தமிழர்!
கல்வியிற்சிறந்து காப்பியங்கண்டு
களித்தவர் நந்தமிழர்—எழில்
காவிரி வளமதைக் காசினியெங்குமே
காட்டினர் நந்தமிழர்!

கோ. சொக்கலிங்கம்,
காரைக்கால்.

கற்பனைச் சித்திரம்

சிக்கலான பிரச்னை!

பரதன்

என் நண்பர், மாஜிஸ்ட்ரேட் மருதவாணம்பிள்ளை, கோர்ட்டிலேமட்டுந்தான், கோபமாகக்காணப்படுவார். அதைக்கூட அவர் கோபமென்று ஒப்புக்கொள்வதில்லை. நீதியின் உருவம்!—என்று கூறுவார். "என்னமோ மருது! நீதிஇப்படி மிரட்டும் உருவிலே இருப்பது எனக்குப்பிடிப்பதில்லை" என்று நான் கூறுவதுண்டு—கோர்ட்டு நேரத்தில் அல்ல.

அன்று மாலை, மருதவாணம்பிள்ளை, என்னைக்கண்டதும், "வா, வா!உன்னைத்தான் தேடிக்கொண்டிருந்தேன். நாளைக்குஒரு வழக்கிலே தீர்ப்பளிக்கவேண்டும், உன்னிடம் அதைக்கூறி, உன் தீர்ப்பு என்ன என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்" என்று கூறினார்.

"இதுதானா எனக்கு வேலை! உனக்குத்தான் சர்க்காரிலே சம்பளம் தருகிறார்கள், சட்டத்தைப்படித்துச் சம்பவங்களை அலசி, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்ய. எனக்கேன் அந்தவேலை" என்று நான்கேலியாகக் கூறினேன்.

"உனக்கே மாஜிஸ்ட்ரேட் வேலை கிடைத்துவிடுகிறது என்று வைத்துக்கொள்ளேன்" என்றார் மருதவாணம், மாலை வேளையிலே அவருக்கு இயல்பாகவே மலரும் மகிழ்ச்சியுடன்.

"எனக்கு அந்தவேலை கிடைத்தால். தானே!" என்று நான்கொஞ்சம் கெம்பீரமாகக்கூறினேன் மருதவாணர், மாஜிஸ்ட்ரேட் குரலிலேஆரம்பித்தார்.

"பெயர் மகாலிங்கம். வயது முப்பது. தொழில், நிலையாக ஒன்றுமில்லை; குற்றச்சாட்டு, பித்தளைச்சங்கலியைத் தங்கச்சங்கலிஎன்றுஏமாற்றிவிற்றான் — இதுதான்வழக்கு. இதிலேதீர்ப்புக்கூறவேண்டும்."

"சரி! மகாலிங்கத்தின் வாக்குமூலம் என்ன" என்றுகேட்டேன், ஒரு அதிகாரி போலவே.

"அதிலே சிக்கல்ஒன்றும்இல்லை. அவன் ஒப்புக்கொள்ளுகிறான்" என்றார் மருதவாணம். "இவ்வளவுதானா? இதிலே யோசனைக்கு என்ன இடமிருக்கிறது? குற்றவாளி, குற்றத்தை ஒப்புக்கொள்கிறான். உடனேசட்டப்புத்தகத்திலே, அந்தக் குற்றத்திற்காகச்செக்ஷன்என்ன அதற்கான தண்டனை என்ன என்று பார்க்கவேண்டியதுதானே இதற்கு என்னைப்பரீட்சிக்கஎன்ன இருக்கிறது" என்று நான்கூறினேன்.

"தங்கச்சங்கலிஎன்று முலாம்பூசியதை விற்றிருக்கிறான், ஒப்புக்கொண்டுமிருக்கிறான், சாட்சியங்களும், அதேபோலஅப்பழுக்கு இல்லை என்றாலும் இது சிக்கலான பிரச்னை" என்றார்மருதவாணர்.

"வேடிக்கையாகவன்றோ நீர் பேசுகிறீர்" என்றுநான் கொஞ்சம் மரியாதையாகவே சொன்னேன், நண்பரின்முகத்திலே, கோர்ட்டுக்களை தட்டுவதுகண்டு. கொஞ்சநேரம் மௌனமாகவே இருந்தார் மருதவாணர், கவலையுடன் காணப்பட்டார். எனக்கு ஏதாவது பேசிவைப்போம் என்றஎண்ணம் உண்டாயிற்று.

"மகாலிங்கம் என்றஆள்தெரிந்தவனா?" என்றேன்நான். உடனே மருதவாணர், உடல் குலுங்கிற்று, முள்தைத்தவர் அலறுவதுபோன்ற குரலிலே, "தெரிந்தவனானால் என்ன, தெரியாவிட்டால் என்ன? நீதியின் கண்களுக்கு சிநேகிதன், பந்து, இவைகள் உண்டா? பைத்யக்காரா! எனக்கு எப்போதும் அம்மாதிரி எண்ணம் வருவதே கிடையாது. யாருக்கும் வரக்கூடாது. நீதியின்சக்கரம், சாமான்யமானதல்ல" என்று கூறினார். இதேது, இன்று இரவு நெடுநேரம்வரையிலே இவருடைய உபதேசத்தைக்கேட்கவேண்டும் போலிருக்கிறதே" என்று நான் சற்றுபயந்தேன்.

"மகாலிங்கம், கள்ளன், அயோக்யன், குடியன்; இவற்றிற்கு ருஜு இருக்கிறது" என்றுதனக்குத்தானேகூறிக்கொள்பவர்போலப் பேசினார் என்நண்பர்.

"சரி! ருஜு இருக்கும்போது, கள்ளனை, அயோக்யனைத்தண்டிக்கவேண்டியதுதானே. இதிலே தயவு தாட்சணியம் என்னமோ இல்லை. கூடாது. இன்னம் யோசனை ஏன்?" என்று நான்மாஜிஸ்ட்ரேட்டானேன். மாஜிஸ்ட்ரேட் மருதவாணம்பிள்ளையோ ஒரு விசித்திர வக்கீலானார்,

"மகாலிங்கம், கள்ளன், அயோக்யன், குடியன், என்பதற்கு எப்படி ஆதாரம் இருக்கிறதோ அதேபோலவே அவன் சாது, யோக்யன், ஏமாந்தவன்,என்பதற்கும் ருஜு இருக்கிறது" என்றார்.

உண்மையிலேயே இது சிக்கலான பிரச்னைதான், என்நண்பர் கவலைப்படுவதற்குக் காரணம் இருக்கிறது என்பதைத்தெரிந்துகொண்டேன்.

"வேடிக்கையாக இருக்கிறதேசொல்வது! யோக்யன், அயோக்யன், என்று ஒரேஆளை எப்படிக்கூறுவது, அமாவாசைபௌர்ணதினத்தில் எனக்கூறுவது போல இருக்கிறதே" என்று நான் உவமையை உதவிக்கு இழுத்தேன். மருதவாணர், அதிலும்சளைக்கவில்லை. "பச்சைஓணான், அடிக்கடி நிறம் மாறும் தெரியுமா?" என்றுகேட்டார். "ஆமாம்!" என்றுநான் இழுத்தேன். "என்ன ஆமாம். எதற்கும் ஆமாம்சாமிபோடுகிறாய். ஊரைக்கொளுத்துவதுதவறு தானே" என்று வேறோர் கேள்வியைக்கேட்டார். திடுக்கிட்டு, "நிச்சயமாகத்தவறுதான்" என்றேன். "தவறுதான்! ஆனால் இலங்காதகனம் புண்யகாரியமாகப் பாவிக்கப்படவில்லையா?" என்றார்நண்பர். இதேது வம்பு வளர்ந்தபடி இருக்கிறதே என்று அஞ்சி, "அதுவேறு விஷயம்! அரக்கனுடைய ஊரை அனுமார் கொளுத்தினார், அது..........." என்று முடிக்கவேண்டியஅவசியமில்லாத வாசகத்தை வீசினேன். "அது கடவுள் விஷயம், அது தானே உன்வாதம்" என்று என்நண்பர் என் வாசகத்தை முடித்துவிட்டு, மேலே பேசலானார், மகாலிங்கம்யோக்யன்தான் அயோக்யனுந்தான்! ஏமாற்றினான் என்பதும் உண்மை, ஏமாந்தான் என்பதும் உண்மைதான்!" என்றார்.

"எனக்கு விளங்கவில்லையே! கோர்ட்டிலே வந்தசாட்சிகள், அவன்யோக்யன், சாது, ஏமாந்தவன் என்றா சொன்னார்கள்" என்றுகேட்டேன். "அதுதானே கிடையாது! கோர்ட்டிலே அவ்வித சாட்சியே கிடையாது" என்று கூறிவிட்டு, உள்ளே சென்றார், சில கடிதங்களுடன் வந்துசேர்ந்தார், ஒன்றை எடுத்தார்.

"இதோபார் இது குலாப்சந்த்சௌகார் சாட்சியம்."

"நம்பள் கடையிலேதான் இந்தமனுஷன் வந்தான். கொஞ்சம் இருட்டு. நம்பள்கடையிலேயும்விளக்குச்சரியா இல்லை, எண்ணை ரேஷன்காலம். சங்கலிகொடுத்தான், எத்தனைசவரன்? இதுநம்பள்கேட்டது. எடைபோட்டு பார், சேட்! அவன் சொன்னான். நம்பள்கிசந்தேகம். என்னா? சங்கலி கொண்டாந்தவன் எடை சொல்லாமே ஏன் இருக்கான்னுயோசிச்சான். நாம்பள் சந்தேகம் வந்தாச்சா, உடனே போலீசுக்கு ஆள்விடுவான். பத்துவருஷமாநம்பள் வியாபாரம் இப்படித்தான். சாயா சாப்பட்டுவர்ரேன்னு சொல்லி போனேன், 308 கான்ஸ்டெபிள் மூலைக்கடைபக்கம் இருந்தான், கூப்பிட்டுவந்து, காட்டினேன், லாக்கப்ஆனான், நம்பள், ராம்ஜீதயவிலே ஆபத்திலே மாட்டாமே தப்பினான்"

இதுமற்றொருசாட்சி, சதாசிவம் வாக்குமூலம்.

"தங்கமுலாம்பூசிய சங்கலியைவிற்றுத் தந்தால் எனக்குப்பாதிபாகம் தருவதாக மகாலிங்கம் என்னைக்கூப்பிட்டான், சங்

(11ம் பக்கம் பார்க்க)

எது சைவம்?

ஈழத்தடிகள் பி.ஏ.,

சம்பந்தர் தமது மூன்றாம் ஆண்டு நிரம்பியிருந்த நாளில், ஒரு நாள், அவர் தந்தையார் குளிப்பதற்காகக் கோயிற் குளத்திற்குச்செல்ல, அவரைப்பின்தொடர்ந்து சென்றார். தந்தையார் குழந்தையைக் குளக்கரையிலிருந்தவைத்துக்குளிக்கச்சென்றார். குளக்கரையில் தனித்திருந்த குழந்தை, நேரம் ஆக ஆகக் குமுறும்பசியால் குரல்விட்டழுதது. அவ்வழுகைஒலி அண்ணல் செவிகளுக்கெட்டியது. அண்ணல் அம்மையை அழைத்தார், அமர்ந்தனர் இருவரும் காளைமீது, அணைந்தனர் பொய்கை மருங்கு, "துணைமுலைகள்பொழிகின்ற பால் அடிசில் பொன்வள்ளத்தக் கறந்தூட்"டென்று அண்ணல்அம்மைக்கு ஆணையிட்டார். அம்மை அரியதொரு பொற்கிண்ணத்தில்முலைப்பாலைக்கறந்து, அதனோடு எண்ணுதற்கும் அரிதென்று சொல்லக்கூடிய' சிவஞான'மாகியஇனிய அமுதமுங்கலந்து, அழுததால்உண்டாகிய கண்ணீரைத் துடைத்துப், பாலமுதை ஊட்டினார். அண்ணல் அழுகை தீர்த்து அருள்புரிந்தார். சிவஞானங்கலந்த பாலமுதை உண்டவுடனே, அதேவினாடியிலேயே, சம்பந்தர், சிவனை மறவாத சிவஅறிவும், பாவங்களை அறவே மாற்றும் பேரறிவும், உவமையிலாக்கலை அறிவும், எவராலும்உணர்ந்துகொள்ளமுடியாத மெய்யறிவும் கைவரப்பெற்றார். இஃதிவ்வாறாகக், குளத்திற்குளிக்கச் சென்றஅவரது தந்தையார் வெளியேவந்து, தனயனது பாலோடுகூடிய எச்சில் வாயைக்கண்டு, 'உனக்கு இதுதந்தவர்யாவர்' எனவெகுண்டு கேட்டுக்கோலினால் அடித்தார். அடியைப்பெற்ற அருளமுதுண்ட அச்சிறுவன், வானத்தில்கையைநீட்டித், 'தோடுடைய செவியன்' எனப்பாடி, 'அதோ, அவர்தான் இங்ஙனம்செய்தார்' என்று அண்ணலையும் அம்மையையும் சுட்டிக்காண்பித்தார். என்றஇப்பகுதியைஆராய்வாம்.

தந்தையோடு குளத்தங் கரைக்குச் சென்ற தனயனுக்கு, அவன் தந்தைகுளித்துவரக் காலத்தாழ்வு ஏற்பட்டதால் பசிமேலிட்டு, அழுகிறான். இவ்வழுகையொலி குளத்தில் குளித்துக்கொண்டு நின்ற தந்தைக்குக்கேட்கவில்லை. ஏன் கேட்கவில்லையென்பதுபற்றிய ஆராய்ச்சி நமக்கேன். என்றாலும், வாசகர்களின் ஐயப்பாட்டை நீக்கச் சிறிது கூறவேண்டியிருக்கிறது. சம்பந்தரின் தந்தை சிவபாதவிருதயர் சிவனிடத்தில் நீங்காதபற்றுக்கொண்டவர். ஆகவே, சிவனிடத்தன்றி வேறெதனிடத்துங் கருத்தைச் செலுத்தாது, உடம்பைப் புனிதப்படுத்தும் குளிப்புவேலையிலும், உள்ளத்தைப் புனிதப்படுத்தும் நாட்கடன், (அனுஷ்டான) வேலையிலும் ஈடுபட்டிருந்திருப்பர். எனவே குழந்தையின் அழுகுரல் அவர் செவிகளில் நுழைய இடமில்லாது போயிற்றென்று கொள்வதே முறை. ஆனால், ஒரு பச்சிளங்குழந்தையை—நல்லது கெட்டதுஅறிந்துகொள்ளமுடியாச் சிறுவனை எவருடைய மேற்பார்வையிலுமின்றித் தனியேவிட்டு எவரும்விலகிச் செல்லமாட்டார்கள். குழந்தைக்குஊறு நேரிடுமோ அல்லது குழந்தைஎங்காவது சென்றுவிடுமோ என்ற அன்போடுகூடிய அச்சம் இல்லாதஒருகல்நெஞ்சம்படைத்த தந்தையன்றி மற்றெவரும் குழந்தைக்கும் தனக்கும் தொடர்பில்லாத முறையில் அதனைத்தனியேவிட்டுச் செல்லமாட்டார்கள். எத்துணைப்புலன்களை அடக்கிச் செய்யும் புனிதவேலையில் இருக்கநேரிட்டாலும், தனித்துநிற்கவிட்டிருக்கும் குழந்தைக்கும் தனதுபார்வைக்குமாவது தொடர்பிருக்கும் முறையிலேயே அதனை விட்டுச்செல்வர். ஆனால், இங்குபேசப்படும் சம்பந்தரின் தந்தைக்குக்குழந்தை தனித்து நிற்கிறதே, என்னாகுமோஎன்ற கவலையும் இருக்கவில்லை, குழந்தை அழுததும்கேட்கவில்லை; அழுகைகேட்டுவந்து பால்கொடுத்த அண்ணலையும் அம்மையையும் அவர்பார்க்கவுமில்லை. அறிவுபெறாதவிலங்கு—பறவையினங்கள் கூடத்தங்கள்குழந்தைகளை இவ்விதம்பராமுகமாய் விட்டுச்செல்லமாட்டா. செவியோசைக்கோ, கண்பார்வைக்கோ, மூக்கினால் முகர்ந்தறியும் உணர்ச்சிக்கோ எட்டக்கூடிய தொலைவிலேயே அவை தங்கள் குழந்தைகளை விட்டுச்செல்லும். யாதாயினும் இடர்நேரிடும் என்ற அறிகுறி தோன்றினால், அவ்விடர்நேருமுன்னரே அவை தங்கள் குழந்தைகளைவந்தடைந்து காப்பாற்றமுயலும். இதுஉயிருள்ள எதற்கும் இயற்கையாக அமைந்துள்ளஅல்லது அமைந்திருக்கவேண்டிய ஒரு இயல்பு. ஆனால் இவ்வியல்பு, பகுத்தறிவு இருக்கவேண்டிய நிலையிலுள்ள மக்களினத்தவரில் ஒருவரான சிவபாதவிருதயருக்கு இருந்ததாகத்தெரியவில்லை. அவர், மக்கட்பிறப்புக் கடவுள்வழிபாடு ஒன்றுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டதென்ற சைவசமயத்துணிபுக்குக்கட்டுப்பட்டிருந்து,பிறதுறைகளில் தமது கருத்தைச்செலுத்துவது அடாதென்ற கொள்கையிற்படிந்திருந்தார்; ஆதலால் அவருக்குத் தம்பிள்ளையைப்பற்றிய நினைவுண்டாகவில்லையென்று கூறுவதற்கும் இல்லை. ஏனென்றால், சமணசமயத்தைஒழித்துச் சைவசமயத்தை வளர்ப்பதற்கு ஒருபுதல்வன் வேண்டுமென்ற பெருவிருப்பமே சிவபாதவிருதயருக்குச் சம்பந்தர் புதல்வனாய்ப் பிறப்பதற்குக் கருவியாக இருந்ததென்பது பெரியபுராணத்துணிபாக இருந்திருக்கிறது. இந்த நிலையில், சிவபாதவிருதயர், தாம் அருமையாக—ஒரு குறிக்கோளுக்காக மிக வருந்திப் பெற்ற தம்புதல்வனை எவருடைய துணையுமோ பாதுகாப்புமோ இன்றித் தனியாகவிட்டுச்சென்றிருப்பாரா? சென்றிருக்கமாட்டார் என்றேஎவருங்கூறுவர். ஆனால், சம்பந்தர் தனியாக விடப்பட்டேயிருந்தார் என்று புராணங்கூறுவதன் பொருள்என்ன? சம்பந்தர் என்பாரைக்கருவியாக வைத்துச் சைவத்திற்கு உயர்வும்சிவத்தன்மைக்குப் பெருமையும் உண்டாக்கவேண்டுமென்ற எண்ணம் இப்புராணஆசிரியரான சேக்கிழாருக்கு இருந்ததென்பதைத்தவிர வேறு காரணம்எதுவும் இருந்திருக்கமுடியாது. "மூன்றாண்டுகூட நிரம்பப்பெறாத குழந்தைகுளக்கரையில் தனியாக நின்றுகுரல் விட்டழுதது; அவ்வழுகைகேட்டு அண்ணலும் அம்மையும் அதனை அணுகி, அம்மைதன் அருமை முலைப்பாலோடுசிவஅருளை (ஞானத்தை)யும் கலந்து ஊட்டிஅழுகையைநிறுத்தி ஆளுடைய பிள்ளையாராக்கினார். குழந்தையைக்குளக்கரையில் நிறுத்திவிட்டுகுளிக்கச்சென்று திரும்பிய சிவபாதவிருதயர், பாலெச்சில் படிந்தவாயோடு நின்ற தம்புதல்வனைநோக்கிநீயார் தந்த பாலை உண்டாய்?" என்று வெகுண்டுகோல்கொண்டு அடித்தார்; உடனே அந்தக்குழந்தை "தோடுடையசெவியன்" என்ற பாட்டைப்பாடி, 'எனக்குஇதைச் செய்த பிரான் இவன் அன்றே' என்று தம்கைவிரலை நீட்டி, 'அதோ காளையின் மீது அமர்ந்திருக்கின்றனரே, அண்ணலும் அம்மையும்; அவர்களே எனக்கு இதைக்கொடுத்தனர் என்றுகாட்டினார். எப்படிக்காட்டினார்?

"........பிரமபுரம் மேவினார் தம்மை அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு எம்மை இது செய்த பிரான் இவனன்றே" என்று சொல்லிக் காண்பித்தார். சிவபாதவிருதயரும் ஏனை அடியார்களும் களிப்பேருவகை எய்தினர்; சைவம் தலைதூக்கிற்றென்று இறும்பூதெய்தினர்; ஆகவேசைவசமயமேமெய்ச் சமயம்; சமணம் முதலான பிறசமயங்களெல்லாம் பொய்யானவை, ஆதலால் சைவராகுங்கள்; சைவத்தை ஆதரியுங்கள்; சிவனை வழிபடுங்கள்" என்ற விளம்பரத்தை உண்டாக்குவதற்காகவே இக்கதைபுனைந்துரைக்கப்பட்டதென்பது சிறிதளவு ஆராய்ச்சியுணர்வுள்ளவர்கட்கும் தெரியக்கூடியதொன்றாம். எப்படியென்றால், அக்காலத்தில், சமணம்தக் கொள்கைகள் தமிழ்நாட்டில் பரவிநின்று சைவத்தின் வளர்ச்சிக்குத் தடைசெய்தமையால், அத்தகையதடையை ஒழிப்பதென்றால்,இத்தகையஒரு'அற்புத'நிகழ்ச்சியைமக்கள்நம்பும்படிசெய்தலன்றி வேறு வழிஇல்லை என்று கண்ட அக்காலச் சைவச் சிறு தொகையினர் இச்சூழ்ச்சியை மிகவுந் திறமையாகச் செய்துமுடித்தனர் என்பதைச் சேக்கிழார் படம்பிடித்துக்காட்டயுள்ளார். இல்லையேல், மழலைமொழியிற்கூடச் சரியாகப் பேசமுடியாதகுழந்தைப்பருவத்தில் பாலுக்காகப்பதறிஅழுத பாலகன் பாநயம் அமைந்தபாடலைப் பாடினான் என்று அறிவுக்கூச்ச

10-ம்பக்கம் பார்க்க.

தொடர் கதை, ★ சௌமியன்.

பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

ஆயிரம் ஆண்டிகளைக்கொண்டு என்ன அற்புதம் செய்யப்போகிறான்? என்றுதுப்பறியும் பிரமநாயகம் யோசிக்கமுயலவில்லை. ஆண்டிகள் வேடத்திலே, போலீசாரையே அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்துவிட்டதால், பார்த்திபன் எந்த விதமான காரியம் செய்வதானாலும், கடைசிவிநாடியிலே கூடத்தன்னால் அதனைத்தடுத்து விடமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது, ஆகவே வீணாக மூளைக்கு வேலை கொடுக்கவில்லை. பார்த்திபனுடைய கடிதத்தை மதித்துஆலாலசுந்தரர் பணம் கொடுத்தார். பணத்தைப்பெற்றுக்கொண்டு பிரமநாயகம், பழையபடி பண்டாரக்கோலம் தாங்கிக்கொண்டு, பார்த்திபனைச் சென்று கண்டு, "ஆயிரம் தயார்! உத்தரவு எதிர்பார்க்கிறேன்" என்றுகூறினார்.

"மிக்க சந்தோஷம், ஆனால் நீ செய்யவேண்டிய காரியத்திலே, ஆரம்பவேலைதான் முடிந்திருக்கிறது. முக்கியமான காரியத்தை இனிச் செய்யவேண்டும். அதிலேதான் உன் முழுச்சமர்த்தும்தெரியவேண்டும்" என்று பார்த்திபன் கூறினான்.

"என் சாமர்த்தியத்தைப்பற்றி நீங்கள் சந்தேகிப்பதுதான் எனக்குச்சங்கடமாக இருக்கிறது. இருக்கட்டும். தூங்கிக்கொண்டிருக்கும் புலிபோன்று இருக்கிறேன். எழுப்பிவிட்டுப் பார்த்தால்தானே தெரியும், என் விஷயம். வீணாகப்பிரதாபத்தைக்கூறுவானேன். நீங்கள் எந்தவிதமான காரியம்வேண்டுமானாலும்செய்யச் சொல்லுங்கள், என்னால் முடியவில்லை என்றால், காரித்துப்புங்கள்' என்று பிரமநாயகம், ரோஷம்கொண்ட பாவனையிலே பேசினான். பார்த்திபன், கொஞ்சநேரமட்டும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அவனுடைய நெற்றியிலே சுருக்கங்கள் தோன்றின, தலைகுனிந்து, அங்கும்மிங்கும் உலவுவதும், பிறகு வெறிகொண்டவன்போல வானத்தை அண்ணாந்துபார்ப்பதும், பெருமூச்சுவிடுவதுமாக இருந்தான். "இந்தப்பண்டாரத்தை முழுவதும் நம்பிவிடுவது சரியாகுமா?" என்று சிந்தனை, அதனால் ஒருவிதமான சஞ்சலம். பார்த்திபனுடைய நிலைமையைப் பிரமநாயகம் உணர்ந்து கொண்டார். நெருக்கடியான இந்தநேரத்திலே, எவ்வளவு சந்தேகம் பிறந்தாலும் கடைசியில் தன்னைதான் துணை கொள்வான் பார்த்திபன், என்பது தெரியும்பிரமநாயகத்துக்கு. எனவேபார்த்திபனிடம், சற்று முடுக்காகவே நடந்துகொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

பார்த்திபன் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டான். என்ன நேரிட்டாலும் சரி, இனி இந்தப்பண்டாரத்தைக்கொண்டு தான் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்றமுடிவு செய்துகொண்டு "சரி! நாளை இரவு பத்துமணிசுமாருக்குப், பண்டாரக்கூட்டத்தை அழைத்துக்கொண்டு, இதே இடம் வந்துசேர். ஒரே கும்பலாகக்கொண்டுவராதே, பத்து இருபது பேர்கொண்ட சிறு சிறுபிரிவுகளாகவந்து சேரட்டும். போ, உடனே அந்த ஏற்பாட்டைமுடித்துக்கொண்டு வந்துசேர், தாமதியாதே' என்றுகூறினான். பிரமநாயகம், இரவு பத்துமணிக்கு அவர்களை அழைத்துவந்துவிடுகிறேன், ஆனால் சாப்பாட்டு ஏற்பாடு ஒன்றும் செய்யக்காணோமே, அந்தப்பயல்கள் பசியோபசிஎன்று கூச்சலிட ஆரம்பித்தால், பரமசிவன்கூடப்பயப்படவேண்டிஇருக்குமே. நீங்கள்செய்கிறஏற்பாடு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆயிரம் பண்டாரங்களை அழைத்து வருவதென்றால், அதற்குமுன் ஏற்பாடாக இங்கே எத்தனை மூட்டை அரிசி இருக்கவேண்டும், காய்கறி ஒரு பக்கத்திலே குவியலாக இருக்கவேண்டும, பருப்பும் பலகாரச்சாமானும் இருக்கவேண்டாமா? சமயலுக்குத் தவசிப்பிள்ளைகள் தயாராக இருக்க வேண்டாமா? கட்டைகாணோம் முட்டைகாணோம், இந்த நிலைமையிலே, அதுகளை அழைத்துக் கொண்டு வந்தால், யார் அதுகளுடன் மல்லிட முடியும்" என்று கோபங்கொண்ட பாவனையிலே கேட்டான்.

பார்த்திபன் சிரித்துக்கொண்டே, "பாழாய்ப்போனவனே சோறு சோறு என்று அலையாதே. அதற்கு வேறு ஏற்பாடுசெய்துவிட்டேன், கவலைப்படாதே, அதோ, காட்டுக்குள்ளே இருக்கும் கோயில் இருக்கிறதே பார்ததாயல்லவா? அதுதான் சமயல்இடம். கோயிலிலே இருக்கும் தேவனே தவசிப்பிள்ளை. எந்தபோபலமே, அரிசி இன்றிச்சோறு, பருப்பின்றிக்குழம்பு, கொண்டுவந்து சேர்க்கும், பஞ்சைப்பயலே, என்னைப் பார்த்தாலே உனக்கு தெரியவில்லையா. நான் பஞ்சேந்திரியச் சேட்டைகளையும் அடக்கிப்பரமனையே பணி செய்பவனாக்கொண்ட பார்த்திபன் என்பது. மூடா, நாளை இரவு வந்துசேர். நடக்கவேண்டியதை நான் கவனித்துக்கொள்வேன், போ" என்று உத்தரவிட்டான். உள்ளேபொங்கியசிரிப்பை அடக்கிக்கொண்டு, பிரமநாயகம், பார்த்திபனுடைய தபோபலத்தைத்தெரிந்து தாசனாகிவிட்டதுபோல நடித்துவிட்டு, "தெரியாத்தனத்தால் ஏதேதோ பேசிவிட்டேன், தெய்வத்தையே ஏவலனாகக்கொண்டுள்ள திவ்ய புருஷனாகிய நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும்" என்று பயபக்தியுடன் கேட்டுக்கொண்டு பாதத்தைப்பணிந்துவிட்டுச் சென்றார்.

குறிப்பிட்டபடி, மறுஇரவு பண்டாரக்கூட்டம்வந்து சேர்ந்துவிட்டது. வந்தவர்களுக்குச் சோற்றுவாசனையே கிடைக்காததால், ஒரு பரபரப்பு உண்டாயிறது. பார்த்திபன், "ஆயிரத்தொரு அன்பர்களே, அரைவிநாடி, வேறு எதைப்பற்றியும் மனதிலே நினைக்காமல் அமலனைத்தியானம் செய்யுங்கள்" என்று உபதேச உத்தரவு பிறப்பித்தான். பிரமநாயகம்ஆச்சரியங்கூட அடைந்தார், "இந்தக்கள்ளன், எவ்வளவுநேர்த்தியாக நடிக்கிறான். பாமரர் இவனிடம் மயங்கியதிலே என்ன ஆச்சரியம் இருக்கமுடியும்" என்று எண்ணிக்கொண்டு. தியானம் முடிந்தபிறகு, பார்த்திபன் மீண்டும்பேசலானான், "பக்தர்களே, உங்களிலே, நூற்றிலே ஒருவராவது, உண்மையைத்தேடிக்கண்டுபிடிக்கவேண்டுமென்ற உத்தமமான நோக்கத்தோடு, இந்தத்தவக்கோலம் கொண்டிருப்பீர்கள். பெரும்பாலானவர்கள், கபடவேடதாரிகள் என்பதுஎனக்குத்தெரியும். ஆனால் அதற்காக நான்உங்களைக்கோபித்துக்கொள்ளவில்லை. எக்காரணம்கொண்டு நீங்கள் காவி அணிந்திருந்தாலும்சரியே, காவி அணிந்தவர்களைக் கடவுள் சன்னிதானத்துக்குக்கு அழைத்துச் செல்லும் தத்துவம் என்னுடையது. கபடம்நிறைந்தவர்களைக் கடவுள் ஏற்றுக்கொள்ளமாட்டாரே, என்று யோசிக்கவேண்டாம். என்னுடைய தபோபலத்தால், உங்களுடைய கபடத்தை கருக்கித் தூளாக்கிக் காற்றோடு காற்றாகும்படிசெய்து விடுகிறேன். பயப்படாதீர்கள்"

பார்த்திபன், ஆவேசம் கொண்டவன் போலப்பேசினான். பண்டாரக்கூட்டத்திடம் பேசி, மனதைமயக்கி அவர்களைத் தன் இச்சைப்படி நடக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தநாடகத்தைப் பார்த்திபன் நடத்துகிறான் என்பது பிரமநாயகத்துக்கு விளங்கிற்று. அந்த ஆயிரவர் உண்மையிலே பண்டாரங்களாக இருந்திருப்பின், அடிபணிவர், அரகராக்கூறுவர், இப்படிப்பட்டசிறந்த தலைவர், வெகு சீக்கிரத்திலே ஒரு மடம்கட்டிவிடுவார். அந்தமடத்திலே தங்களுக்கெல்லாம் இடம் கிடைத்துவிடும் என்றுஎண்ணிச் சந்தோஷித்திருப்பர். வந்தவர்களோ, சி. ஐ. டி.கள் பண்டாரங்களாக

(10-ம் பக்கம் பார்க்க)

எது சைவம்?

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வர். சிவனுக்கு வடிவமும் வடிவமின்மையும் அற்ற ஒருவடிவம் உண்டென்றுர் பிறிதொருவர். ஆனல், சமண சமயத்தையொழித்து உண்மையான சைவசமயத்தை உலகுக்குணர்த்த வந்ததாகச் சொல்லப்படும் சம்பந்தர் கூறும் சிவஇலக்கணம், சிவனுக்கு வடிவம் உண்டென்பதையே விளக்குகின்றது. எப்படியென்ருல், "நீயார் தந்தபாலை உண்டாய்" என்ற சிவபாத விருதயரின் கேள்விக்கு விடையாகச் சம்பந்தர் கூறுகிருர், "சிவனுடைய செவிகளில் ஒன்றில் தோடு இருக்கிறது; அவனுடைய உடம்புமுழுவதும் சுடலைச் சாம்பலால் பூசப்பட்டிருக்கிறது; அவனுடைய இருப்பிடம் பிரமபுரமாகிய இத்தோணிபுரமே; இப்படி அடையாளங்களோடுள்ள சிவன்—நமது சிவன்—எனக்குப் பாலமுதூட்டியசிவன் அதோ நிற்கின்ருன் பார்த்திடுக" என்று.

எனவே, சம்பந்தர்கூறும் இக்கூற்றுச், சிவனுக்கு வடிவம் உண்மையாகவே உண்டுஎன்பதை வலியுறுத்துவதோடு, ஏனைச்சிவசமயத் தலைவர்கள் கூறிப்போந்த சிவஇலக்கணங்களைப் பொய்யாக்கியும்விட்டது. என்ருலும் சம்பந்தரின் இக்கூற்று எத்துணை உண்மையென்பது இன்னும் அவர்கூறும் சிவஇலக்கணங்களை ஆதாரமாகக்கொண்டு முடிவுகட்டப்படவேண்டியதொன்ருகும்; ஆகையால் இதுவே அவர்கூறும் சிவஇலக்கணத்துக்கு முடிந்தமுடிபானகருத்தென்று எவரும்கொள்ளவேண்டாம்.

"தோடுடையசெவியன்" என்பதை முதலடியாகக்கொண்ட பதிகத்தில் பதினெருபாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை விளக்குவனவாகவே காணப்படுகின்றன. அப்பதிகத்தில்வரும் எட்டாவது பாட்டு இராவணனைக்குறித்தும், ஒன்பதாவது பாட்டுத் திருமால் நான்முகன் ஆகியவர்களைக்குறித்தும், பத்தாவது பாட்டுப் புத்த சமணர்களைக்குறித்தும் பாடப்பெற்றன. இராவணனைக்குறித்துப் பாடப்பெற்ற பாடலுக்குச் சைவப்புலவர்கள் தருங்கருத்து இது:—பிழைசெய்தவர்கட்கும் சிவன் அன்புகாட்டும் தன்மையர்என்பது. ஒன்பதாவது பாடலுக்கு அவர்கள்தரும் கருத்து:—முனைப்பின்றித் தம்மை வழிபடுவோர்க்குச் சிவன் அருள்புரியுந்தன்மையர்என்பது. பத்தாவது பாடலுக்கு அவர்கள்தரும் கருத்து:—தீமைசெய்கிறவர்களைச்சிவன் அழிக்கும்தன்மையர்என்பது.

எனவே, எட்டாவதுபாடலுக்கு அவர்கள்தரும் விளக்கம், இராவணன் பிழைசெய்தான்; ஆயினும் அவனைச் சிவன் ஆட்கொண்டார் என்பதைவைத்துஆராயின், இராவணன்செய்த பிழையாது? என்ற கேள்வி எழுகிறது. இராவணன் சிவஅன்பன்; சிவன்மீதுசாமவேதம்பாடி அவரை வழிபட்டவன்என்பது கதை. இக்கதை உண்மையா அல்லவா என்பது ஒருபுறமிருக்கட்டும். இக்கதையின்படி இராவணன் சிவனுக்குப் பிழைசெய்தவனாகஎண்ண இடமில்லை. சிவனுக்கோ, சிவசமயக்குரவர்களுக்கோ, சிவசமயத்தவர்க்கோ பிழைசெய்தான் இராவணன் என்றும் கூறுவதற்கில்லை. சிவனிடத்து அன்புள்ள இராவணனுக்குச் சைவத்தினிடமோ அன்றிச் சைவசமயத்தவரிடமோவேறுப்போ அல்லது பகைமையோ இருக்கக் காரணமுமில்லை. பிள்ளையைக்கிள்ளிவிட்டுத் தொட்டிலையும்ஆட்டிவிடும்அவ்வளவு சிறுமதியுடையவன் இராவணன் என்று கூறிவிடமுடியாது. மற்றைச் சிவஅன்பர்களைப்பார்க்கிலும் இராவணனுடைய சிவஅன்பு ஒருபடி ஏற்றமாகவேஇருந்திருக்கிறது, கதையின்படி. இந்த நிலையில், இராவணன், சிவனுக்கோ அன்றிச் சிவத்தொடர்புடையவேறெவர்க்குமோ—எதற்குமோ பிழைசெய்தான் என்று கூறுவது குற்றச்சாட்டுக்கு இராவணனை எப்படியாவது இலக்காக்கித்தீரவேண்டுமென்ற கட்டாயத்திலிருந்தனர் சிவஅன்பர்கள் என்பதன்றி, வேறுஎதுவும் இருந்திருக்கமுடியாது.

இனி, இராவணன் ஒருதமிழன்; தமிழ் வீரன்; வலிமைபொருந்திய அரசன். எனவே, தமிழர்க்கும் தமிழர் கொள்கைகட்குமாருக இடர்புரிந்தாரை இறுதிவரை எதிர்த்துப் போர்புரிந்தான். இதுவே அவன்செய்த பிழை. இதனைப் பிழையென்போர், பிழை எது? சரிஎது என்பனவற்றைப் பிரித்தறியமுடியாத பேதையரே. இத்தகையினரை யாருக்கு ஒப்பிடுவது? உலகியல் அரசியல் ஆகிய எதுவும் அறியர்தவரே, அரசியலைஒழுங்குபடநடத்துவதில்ஏற்பட்ட இடையூறுகளைக் களைந்தெறியும்பணியை மேற்கொண்டிருந்த இராவணனைப் பிழைசெய்தவனுகக்கூறுவர். மற்றையோர், மரபுரிமையை மாசறக்காத்த மாண்புடையோன் இராவணன் என்றே கூறுவர்.

இனி, இராவணனை ஒரு சைவன்என்றும் சிவஅன்பன்என்றும்கூறியவர்களின் கருத்து எதுவாக இருந்திருக்கலாம் என்பதை ஆராயும்போது, அதன் உண்மையும் நன்கு தெளிவாகின்றது. எப்படியென்ருல், இராவணன் ஒரு தமிழன்; தமிழரசன்; வலிமைபொருந்தியவன்; தமிழ்மரபைக்காத்தவன்; அவன் காலத்திலேயே பலரால் பாராட்டப்படக்கூடிய புகழோடுவிளங்கியவன்; கல்வியறிவில் முதிர்ந்தவன். இப்படிப்பட்ட ஒருவனைச் சைவன்என்று கூறிவிட்டால், அவன்மரபில்வந்த அனைவரும் தங்களைச் சைவர் என்றே ஒப்புக்கொண்டாகவேண்டும் என்ற காரணத்தை அடிப்படையாகக்கொண்டே, சமணமதத்தை ஒழித்துச் சைவத்தைவளர்க்கவந்த சம்பந்தரால் பாடப்பட்டதாகச்சொல்லப்படும் தேவாரப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் இராவணனை நுழைத்து அவனைச் சைவனுக்கிவிட்டனர். இல்லையேல் பதிகம்தவருது இராவணனுடைய பெயர் பேசப்படவேண்டியதில்லை. இராவணன் ஒருபரம்பரைச்சைவனுக இருந்திருப்பானுனல், அவனைப் பதிகம்தவருது இழுத்துப் போட்டுச் சைவவிளம்பரம் செய்திருக்கவேண்டியதேயில்லை. எங்காவது ஒரு இடத்தில் குறிப்பிட்டாலேபோதும்இராவணனைச் சைவன்என்று காட்ட. மாணிக்கவாசகர், இராவணன் மனைவி மண்டோதரியைத் தம்முடைய திருவாசகத்தில் ஒருஇடத்தில்மட்டுமே குறிப்பிட்டதுபோலச் சம்பந்தரும் செய்திருக்கலாம். காங்கிரஸ் விளம்பரத்திற்குக்காந்தியார் பெயரைத் துணிகளிலும், பெருங்காயத்திலும், பீடியிலும், சோப்பிலும், சீப்பிலும், தெருவிலும், திண்ணையிலும் விளம்பரம்செய்வதுபோலச், சைவசமய விளம்பரத்திற்கு இராவணன் பெயரைத் தேவாரம்முழுவதிலும் நுழைத்து விளம்பரம்செய்ய வேண்டியதில்லை. உண்மைச் சைவத்திற்கு உரைகல் எதற்கு? ஊறிய விளம்பரம் எதற்கு? ஊளுத்துப்போன கொள்கைகளோடுகூடியசைவத்தில்தூய தமிழ்மரபினனை இராவணன் பெயரை ஏன் நுழைக்கவேண்டும்? சரிந்த சைவத்திற்குச் சப்பைக்கட்டுக்கட்டவேண்டுமானல் சம்பந்தர்கள்பலரை அதிற்சேர்த்துச் சிறப்புத்தேட முயன்றிருக்கலாம். அங்ஙனம்செய்வதைவிட்டு, ஆரியப் பகைவனை இராவணனை ஆரியமதமாகிய சைவத்தில் நுழைத்து அதற்கும் இராவணனுக்கும் தொடர்புகாட்டமுயல்வது, தங்கமுலாம் ஏற்றிய பித்தளை தங்கமாகக் காட்சியளிப்பதையே ஒக்கும்,

இனி, நான்முகன் திருமால் ஆகியவர்களின் தன்முனைப்பைப்பற்றி ஒருசிறிது ஆராய்வாம். நான்முகனும் திருமாலும் தம்மைத்தாமே நான்பெரியவன், நான் பெரியவன் என்று கூறிச்சொற்போர் நிகழ்த்தினராம். இவர்களின் இத்தன்முனைப்பை ஒழிப்பதற்குச்சிவன் இவர்களின் நடுவே நெருப்பாய்த்தோன்றினராம். இந்நெருப்பின் உயரத்தையும் ஆழத்தையும் அளந்தறிய முடியாத நிலையில், நான்முகன், தான் நெருப்பின் முடியைக் கண்டதாக முழுப்பொய் சொல்லித்தன் முனைப்புள்ளவனுனும். திருமால், தான் நெருப்பின் அடியைக் காணமுடியவில்லை என்ற மெய்யைச்சொல்லி தன்முனைப்பைவிட்டவரானராம். இதனல் சிவனுக்குச் சீற்றம் உண்டாகி, நான்முகனுக்குக் கோயிலில்லா தொழியும்படி செய்துவிட்டாராம். திருமால் மெய்பேசியதால் அவருக்கு மேதினியில் ஆலயம் இருக்கும்படி செய்தாராம். இதுகதை. இக்கதை கற்பிக்கும்பாடம் என்ன? கதையை நாம் நம்பவில்லை. கதைதரும் கருத்தை நம்பவேண்டுமென்று சொல்லப்படும் சிவ

(8-ம் பக்கம் பார்க்க.)

திராவிட நாடு.

காஞ்சி 21—1—45 ஞாயிறு

'காந்திமார்க்கட்' நிலவரம்!

காந்தியக்கடை வீதியின் நிலவரம், இப்போது, எப்படி இருக்கிறதென்பதைக்காண்பதற்கே காட்சியாக இருக்கிறது, கேட்பதற்கும் சுவையாகத்தான் இருக்கும். மடத்திலே உள்ள சாமியார் மௌனி என்றால், உபதேசம் எப்படி இருக்கும்! மௌனசாமி மடத்திலே செவிட்டுச்சீடர்கள்!! இந்தவிசித்திர மான நிலைமையிலே இருக்கிறது காந்திய ஆஸ்ரமஅரசியல் வாழ்வு. ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார் தேய்ந்த கனவினால் வாடும், தேசோத்தாரகர், அவருடைய சீடகோடிகளோ, திசைக்கொன்றாக நின்று தேம்புகின்றன, மஞ்சள் கருப்பாச்சுதே! மருக்கொழுந்தும் வேம்பாச்சுதே!என்று பாடி. நெருக்கடியான நேரத்திலே பதவிகளை ராஜினாமாச்செய்து விட்டால் ஏகாதிபத்யம் விழுந்தடித்து ஓடிவந்து, ஏகபோக மிராசுபாத்யதையைத் தட்சணை கொடுத்து ஆஸ்ரமத்து அட்சதையைத் தலையிலே போட்டுக்கொள்ளும், என்று எண்ணினார்கள், ஆனால் இந்தக்கூட்டத்தார் உண்டாக்கிய நெருக்கடியை ஒரு கொசுக்கடிஎன்று ஏகாதிபத்தியம் எண்ணிவிட்டது. போட்டதோ புலிவேஷம், ஆனால் அதனால் கிடைத்ததோ மகாமோசம். பதவியிலே வெள்ளைக்காரர்கள் பக்குவமாக உட்கார்ந்துகொண்டனர், 93-ம் செக்ஷன் எனும் தண்டாயுதத்தைத் தாங்கியபடி. வைதிகக் கலியாணத்திலே ஒரு சடங்கு. மாப்பிள்ளை, தாலிகட்டு முன்பு, காசியாத்திரை போவது என்றோர் சிறுபிள்ளை விளையாட்டு. மஞ்சள் உடைதரித்து, மேளதாளம் முழங்க, கலியாண மாப்பிள்ளை கிளம்புவான் காசியாத்திரை போகிறேன் என்று. நாலு வீடு கடந்ததும், பெண் வீட்டார் பின் சென்று, காசிக்குப்போக வேண்டாம், பூசுரர் சாட்சியாக எமது பூங்கொடியாளைத்தருகிறோம் என்று சொல்லி அழைத்துவந்து, பிறகு தாலிகட்டுகிற சடங்கு நடைபெறும். இதுபோன்ற "காசியாத்திரையாக" இருக்கும் என்ற நினைப்பிலே தான், காங்கிரசார் மந்திரிப்பதவிகளை ராஜிநாமாச்செய்தனர். ஆனால்நடந்ததோ வேறாகிவிட்டது! காசியாத்திரைக்குக் கிளம்பின மாப்பிள்ளையைப்பார்த்துப்பெண்வீட்டார், "அடா! கருத்தில்லாதவனே! கன்னிகையை மணம்செய்துகொண்டு, அவளுடைய அன்புஎனும் கங்கையில் மூழ்கி, வாழ்க்கைஎனும்தவம் செய்து, குழந்தை எனும் வரம்பெற்று வாழவகையற்றவனாய், காசிக்குக்கிளம்புகிறேன் என்று கூறுகிறாயே, உனக்கு யார் பெண் தருவார்கள்? காசிக்கேனும் போ, காளத்திக்கேனும் செல்'' என்று கூறிவிட்டால், மாப்பிள்ளையின் நிலைமை எப்படி இருக்கும். அதுபோலவே பதவியை ராஜிநாமாச்செய்த உடனே, பாரத வீரர்களே! பயமறியாச்சூரர்களே! இதோ உமதுபாதம் பணிகிறோம், பதவியிலே மீண்டும்வந்து அமருக! என்று கூறுவார்கள், நாம்மீண்டும் பதவியிலேவந்துஅமர்ந்துகொண்டு அட்டகாசம் செய்யலாம், என்ற அசட்டுத்தைரியத்திலே ஆட்சிப்பீடத்தைவிட்டுஅகன்றனர். ஆங்கிலர்சந்துவிட்டதுவந்துவிட்டேன் என்றுகூறிக்கொண்டு, காலியான இடத்திலே உட்கார்ந்துகொண்டு, "கபர்தார்!'' கூறுகின்றனர். இப்போது காங்கிரசார் கலக்கமுற்றுக்கிடக்கின்றனர். இந்த நிலையிலே உள்ள காந்திமார்க்கட்டிலே, இப்போது மந்தநிலையை மாற்றக்கொஞ்சம் தந்திரகாரியம் நடக்கிறது.

குயில் கூவுகிறது! அதே நேரத்திலே கூண்டுக்கிளி பேசுகிறது. சரோஜனிதேவியின் கவிதாப்பிரசங்கம், கல்கத்தாவிலே நடந்தது, சென்னைக்கும் கிடைத்திடும் நிலைவந்தது. அந்தக்குயிலியின்மொழியிலே, ஓர் இன்பம், தோய்ந்திருக்கிறது. கவிஉள்ளம் படைத்த, நறைமூதாட்டி, நாட்டுநிலைமையைத் தமதுபாட்டுமொழியினால் மீட்டிடும்போது, கேட்டிட இன்பமாகத்தான் இருக்கும். அந்தக்குயிலியின்பேச்சிலே, காந்தீயக்குப்பைகூளங்கள் நீக்கப்பட்டு, மணிகள் மட்டும்பொறுக்கிஎடுக்கப்படும்வகையைக்காணலாம். எடுத்துக்காட்டுஒன்று. சரோஜனி அம்மையார் பேசும்போது, காங்கிரசாரின் மனதிலே இதுபோது புகுந்துகொண்டுள்ள மருட்சியைக்கண்டித்தார்கள். "ஏன்பிற கட்சிகளை வெறுக்கிறீர்கள்? கட்சிகள் ஏதும் இருக்கக்கூடாது, நாட்டிலே காங்கிரஸ் மட்டுமே இருக்கவேண்டும என்று கூறுவது, நமது பலஹீனத்தையும் பயத்தையும் காட்டுவதாகும் என்று எடுத்துக்காட்டிக் குறிப்பாகக்கம்யூனிஸ்டுகளைக் காங்கிரசிலே இருக்கவிடக்கூடாதென்று, கங்கணம்கட்டிக்கொண்டு வேலைசெய்யும் போக்கைக் கண்டித்தார். இந்தக்குயில் மொழிக்குநேர்மாறாக இருக்கிறது கூண்டுக்கிளிகள்போலக்காந்தீயத்திற்குள் முடங்கிக்கிடக்கும் சிலருடைய பேச்சு. கம்யூனிஸ்டுகளைக்கொண்டு, தொழிலாளர்களையும், மாணவர்களையும், பாமரரையும், காங்கிரஸ் வலையிலே சிக்கவைத்தனர் முன்பு. இப்போது, முதலாளிகளின் முகதாட்சணியத்துக்காக அதே கம்யூனிஸ்டுகளை வேட்டையாடுகின்றனர், சரோஜனி அம்மையாரின் சஹானுவிற்குப்பிறகும், பக்தவத்சலம் போன்றவர்கள் சொன்னதைச்சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பது போல, காந்தீயஎஜமானர்கள் எதைச் சொல்கிறார்களோ அதையே திருப்பித் திருப்பிக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இன்றுசமரசச்சிந்துபாடும்சரோஜனிஅம்மையார்உள்படச்சேர்ந்துவளர்த்த மடமைதான், நாட்டுக்குக் காங்கிரஸ் ஒன்றுதான் விடுதலைஸ்தாபனம்: பிறஎல்லாம் பிரிட்டிஷாரின் எடுபிடி, என்ற நாஜிசநினைப்பு. அந்தநாசீசநினைப்பு நரம்பிலேஊறிக்கிடப்பதால்தான், கம்யூனிஸ்டுகள், ராயிஸ்டுகள், முதலியவர்களுக்கு இவர்கள் இப்போது ஆங்காங்கு கூட்டி மெழுகிக்கோலமிட்டுக்காட்டும் காங்கிரஸ் இல்லங்களிலே இடம் கிடையாதுஎன்று கூறிவிட்டனர். இந்த கூண்டுக்கிளிகளை நம்பி, இருக்கும் அன்பர்களின் நிலைமை கண்டு வருந்தவேண்டி இருக்கிறது.

இந்தநேரத்திலே, கீரையைவழித்துப் போடச்சொல்கிறார் கீர்த்தி வாசர்! கதைஉண்டு. கீரைமட்டுந்தானா என்று கோபித்துக்கொண்டகணவன், மனைவி இலையிலிட்ட கீரையைவாரிச்சுவற்றிலே அடித்தானும். பிறகோ [illegible]றுகடிக்கிறது, வகையான வேறுபண்டமும் இல்லை. பார்த்தான் சுவற்றிலேஇருந்த கீரையையே வழித்துப்போடச்சொன்னானும். அதுபோல, ஆச்சாரியார், பழையகிரிப்ஸ் திட்டம், அதற்கும்முந்திய 1935ம்ஆண்டு சட்டதிட்டம், ஆகியஏதோவொன்று கிடைத்தாலும்போதும்என்ற எண்ணத்துக்குவந்துவிட்டார்! 1935ம் வருஷத் திட்டத்தைப்பற்றிப்பேசினால் வாய் நாறும், தொட்டால் கைநாறும்என்று பேசியகீர்த்திவாசர், பிறகு அதே 35ம் ஆண்டுதிட்டத்தின்கீழ் முதலமைச்சரானார். அத்தகைய கீர்த்திவாசர் இப்போதுகீரையைவழித்துப்போடச்சொல்கிறார். உண்மையிலேயே இப்போது காங்கிரசாருக்குப்பசி, அவ்வளவு! இவருடையநிலைஇப்படிஇருக்க, பம்பாய் மாகாண பாரதவீரர்இருக்கிறாரே புலுபாய்தேசாய், அவர், வைசிராய் நிர்வாக சபையை மோப்பம்பிடித்துக்கொண்டு உலவுவதாக வடநாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன. இந்தநோக்கம்கொண்டு, முஸ்லீம்லீக் செயலாளர் நவாப்சாடாலியாகத் அலிகானிடம்சென்று உறவாடிப் பார்த்தார், கரிமுன் நரிநடனமிடுவது போல! லியாகத்அலிகான், இந்தக் கூத்துகண்டு இலயித்துவிடக்கூடியவரா! இல்லை! சென்னையிலே, சாமாரியாகப் பேசியிருக்கிறார், பாகிஸ்தான்பெறுவது தான் எமது இலட்சியம், இந்திய உபகண்டத்தின் விடுதலைக்கு அதுவேவழி என்று. ஜனாப்ஜின்னா, ஆமதாபாத்திலே பேசியிருக்கிறார், பாகிஸ்தான் இன்றேல் கபர்ஸ்தான் என்று. வெள்ளையனை விரட்ட, இதுவேவழி! இந்துஸ்தானமும் பாகிஸ்தான் உருப்பட்டாலொழிய உருவாகாது என்று கூறியிருக்கிறார். அமிரேமில்லத்தின்கணைகள் காந்தியக் கடைவீதியிலே பாய்ந்துவிட்டன. இச்சமயத்திலே, எங்கோஒரு சுதேசசமஸ்தானத்திலே நிர்வாகவேலையிலேஇருக்கும் ஒருமுஸ்லீம், பாகிஸ்தான்கேடுபயக்கும்என்று கூறிவிட்டாராம், அதைக்

(7ம் பக்கம் பார்க்க)

ஏது சைவம்?

8-ம் பக்கத் தொடர்ச்சி.

செய்த தீமை என்ன? சிறப்பாகச் சைவர்களுக்கும் பொதுவாக அனைவருக்கும் சமணப்பெரியார்கள் அறிவுச்சுடர் கொளுத்தியதைத் தவிர அவர்கள் செய்த தீமை என்ன? மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் அதனுல் ஏற்படுகின்ற நல்லியல்புகளுக்கும் வழி கோலிய சமணர்கள் தீயவர்களா? புலமைக்கு வித்திட்ட புனிதச் சமணர்கள் தீயவர்களா? உலகுக்குஒழுக்கநெறி கற்பித்த உயரிய நோக்கங்கொண்ட சமணர்கள் தீயவர்களா? இன்று சைவத்திற்காகப் பரிந்துபேசும் புலவர்கட்குப், பேசும் அறிவு உண்டாவதற்குக் கருவியாக அமைந்த நூல்களை நமக்களித்த சமணர்கள் தீயவர்களா? தமிழ்நாட்டில் தமிழ்ச்சங்கம் என ஒன்று நிறுவிப்பெருமை அடைவதற்குச் சங்கஇலக்கியங்களை நமக்கு வழங்கிய சமணப்பெரியார்கள்தீயவர்களா? 'நானும் ஒரு புலவனே' என்று நாத்துடிக்கப்பேசும் நிலைமைக்கு நம்புலவர்களை ஆளாக்கிய நன்னூலைநமக்களித்த சமணப்பெரியார்கள் தீயவர்களா? கலையறிவு நமக்குண்டாகும்படி நம்மீது அன்புகூர்ந்து நல்ல மணிமேகலையையும், சிறந்த சிலப்பதிகாரத்தையும், செம்மையான சீவகசிந்தாமணியையும், நாலடிபோற்றும்நாலடியாரையும், தெருவெல்லாம் தீந்தமிழ் முழக்கமும்தெள்ளு தமிழறிவும் தெளிவறிவும் உண்டாக்கிய திருக்குறளையும் இன்னும்இவைபோன்ற அறிவுக்களஞ்சியங்களையும் நமக்கு நல்கிப்போந்த அறிவுமணிகளான சமணப்பெரியார்கள் தீயவர்களா? தீயவர்களைச் சைவம் கண்டுபிடிக்கும் முறையைக்காணுங்கள் அன்பர்களே! யாதாயினும்ஒருதீமை சமணர்களால் செய்யப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் நமக்குச்செய்த அளவு கடந்த நன்மைகளை எண்ணும்போது,

> "கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த ஒன்றுநன்று உள்ளக்கெடும்"

என்ற குறளையும் மறந்து, தமிழ்மக்களுக்குப்புறம்பான சைவத்தை வளர்க்கவும் அதற்காகப் பரிந்துபேசவும் முன்வந்து விடுகின்றனரே, சமணப்பெரியார் தந்த சங்கஇலக்கியங்களைக் கற்று, அவற்றால் ஏற்பட்ட அறிவை இரவலாகச் சைவத்தின்பாற் செலுத்திச் செப்படிவித்தை செய்யும் புலவர்கள்! என்னே இவர்கள் தம் அறிவு!!

கப்படும் வால்களைவெட்டுவதாகக், பெரியாரின் பெருநெறியைக் கான்பூர் மாநாட்டினர் ஏற்றுக்கொண்டனர். பிற்படுத்தப்பட்டவகுப்பாரின் அமைப்புக்குப் பெரியாரைத்தலைமைதாங்கச்செய்துள்ளனர். "இந்து" என்ற அடிமைப் பட்டத்தை அகற்றிவிடவும் இசைந்தனர். பெரியாரின்படைஎடுப்பு, டாக்டர் அம்பேத்காரின் தாக்குதல், ஜனுப்ஜின்னுவின்போர், எனும் மூன்று எதிர்ப்பு அலைகளிலேசிக்கிக்கொண்டிருக்கும், காந்தீயர்களின் மார்க்கட்நிலவரம், சற்றுக் கஷ்டமானதாகத்தானே இருக்கமுடியும்!

திருமண அழைப்பு.

வ.ஆ. திருப்பத்தூரில் ஸ்டார் ஸ்டுடியோசொந்தக்காரர்தோழர் ஜி. வேங்கடாசலம் அவர்களுக்கும். தோழியர் லட்சுமிக்கும் 28-1-45ல் "திராவிட நாடு" ஆசிரியர் C. N. அண்ணாதுரை M.A., அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் இதையே அழைப்பாக ஏற்று வரக்கோருகிறோம்.

V. V. ஆறுமுகம்.

என். எஸ். கே. நாடக சபையாரால்

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

13—1—45 முதல் தினசரி

★ பம்பாய் மெயில் ★

(நாடகம்) நடைபெறுகிறது.

தந்தி:—"புறமார்க்" திருச்சி.

காந்திமார்க்கட் நிலவரம்!

6-ம் பக்கத் தொடர்ச்சி.

கேட்டதும் காங்கிரசார், துள்ளிக்குதித்துத்தொடைதட்டிக்கொண்டு, "கேளுங்கள்! கேளுங்கள்! பாகிஸ்தானை ஒரு முஸ்லீமே எதிர்க்கிறார்" என்று கூறுகின்றனர். காங்கிரஸ் மந்திரியாக இருந்தகோபால ரெட்டியார், கோவையிலே பாகிஸ்தானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார். முஸ்லீம்லீக்கைச் சரிப்படுத்தாமல் ஒருபலனும்கிடையாது என்று எச்சரித்தார். ஜனுப்ஜின்னாவை விடுதலைவிரோதிஎன்று கூறுவது அடாது என்று அறிவுரைபுகன்றிருக்கிறார். இந்தியா ஒரேநாடு என்ற கற்பனையைத்தாக்கினார். அதற்குச்சிலதினங்களுக்குமுன்பு, காளேஸ்வராராவ் எனும் ஆந்திரநாட்டுப் பார்ப்பனர், பாகிஸ்தான்மட்டுமல்ல, வங்கஸ்தான் என்று தனிவட்டாரம்பிரித்து, பாகிஸ்தான், வங்கஸ்தான், இந்துஸ்தான் என்று மூன்று வட்டாரங்கள் அமைக்க வேண்டும்என்றுபேசியிருக்கிறார். இப்படிக் காங்கிரஸ் தலைவர்களென்போர்களிற்பலரும், பாகிஸ்தான்கொள்கைக்குப்பிரசாரகர்களாகமாறும் போதுயாரோர், பதவியிலிருப்பவர் பாகிஸ்தானைக் கண்டித்துப்பேசிவிட்டதற்குக், காங்கிரஸ்ஏடுகள் பிரமாதப்படுத்துவது கேவலம், அற்பசந்தோஷம், அதுநிலைக்காது. ஒரு புறத்திலே அமீரேமல்லத்தாக்கும் நேரத்திலே, பெரியார், படைஎடுப்புவடநாட்டின்மீது நடந்திருக்கிறது. கல்கத்தா, கான்பூர்முதலிய இடங்களிலே, பெரியார்பேசினார், ஆரியஎதிர்ப்புபற்றி. கான்பூர் மாநாடு, சுயமரியாதைமாநாடாகிவிட்டது! இராமாயணதகனம் முதற்கொண்டு, பெயர்களுடன் ஒட்டவைக்

எது சைவம்?

5-ம் பக்கத் தொடர்ச்சி.

ளோடு தொடர்புபடுத்தப்பட்டிருப்பதால் சிவனை நம்புபவர்கள் இக்கதையின் கருத்தையும் தெரியவேண்டுமன்றோ!

சிவன், சிவஇலக்கணப்படி, உலகை [illegible]—ஆகவே பெரியவன். மற்றவர்கள் எல்லாம் சிறியவர்களே. சிறியவர்களுக்குச் சிறுமதி இருப்பதும் இயல்பே. சிறுமதிக்கேற்பச் சிறியவர்கள் ஒருவருக்கொருவர் தம்மைத்தாமே பெரியவன் என்று கூறிச் சண்டையிட்டுக்கொள்வதும் இயல்பே. இத்தகைய சண்டைகள் இல்லாமற் செய்யவேண்டியது பெரியவரின் கடமை. ஆனால் பெரியவர் என்ன செய்தார். இருவராலும் கண்டுபிடிக்கமுடியாதபடி நெருப்பாய் வளர்ந்து நின்றார். சிறியவர்களில் ஒருவரான நான்முகன், தான் நெருப்பின் முடியைக் கண்டதாகப் பொய்புகன்றார். மற்றச் சிறியவரான திருமால், தான் நெருப்பின் அடிப்பாகத்தைக் காணமுடியவில்லை என்று மெய் சொன்னார். மெய் பேசியவருக்கு மேதினியில் இடமளித்தார், பொய் பேசியவருக்கு இருக்க இடமில்லாதபடி செய்தார் பெரியவர். எப்படிப்பட்ட பெரியவர்? பிழை புரிந்தார்க்கும் அருள்சுரப்பவராகச் சொல்லப்படும் பெரியவர். பெரியவர் செய்கை எப்படியிருக்கிறது பாருங்கள் அன்பர்களே!

இராவணன் பிழை செய்தான்; ஆயினும் அவனை ஆட்கொண்டார் சிவனும் பெரியார் என்று முன்னர் சொல்லப்பட்டது. அடுத்தாற்போல், பிரம்மா பிழை செய்தான், அதனால் அவன் குடியிருக்கவே இடமில்லாது செய்துவிட்டார் அதே சிவப்பெரியார். இந்தப் பெரியவரைத்தான், அனைத்துயிரையும் ஒன்றாகக்கருதி, அருள் சுரப்பவரென்றும், நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநிற்பவரென்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இக்கதையில் பேசப்படும் திருமாலுக்கும் நான்முகனுக்கும் நடு நின்றாரா? அல்லது நடுவே நின்றாரா? என்றால், 'நடுநிற்கவில்லை' இருவருக்கும் நடுவே நின்று நான்முகனை நாட்டைவிட்டுத் துரத்தினார், திருமாலுக்குத் திருவிழாச் செய்யும் திருக்கோயிலை உண்டாகக்கொடுத்தார். இது, காணார்க்கும் கண்டவர்க்கும் களிப்பருளும் கவடற்ற கடவுளின் செயல். காணாதவன், கண்டேன் என்று சொல்வதனாலும், காணாதவன் காணவில்லை என்று சொல்வதனாலும், விருப்பு வெறுப்பற்றவராகச் சொல்லப்படும் அந்தவிடையேறிக்கு வந்த இழுக்கென்ன? பெருமை யென்ன? பெருமை சிறுமை எதனையும் பொருட்படுத்தாத பெரியவர், அவர்கள் தெரியாத்தனமாகச் சண்டை போடுகிறார்கள், நமக்கும் அதற்கும் என்ன தொடர்பு என்று பேசாமலன்றோ இருந்திருக்கவேண்டும். அல்லது அவ்விருவர் முன்னும் தோன்றி, "நீங்கள் ஏன் வீணாகச் சண்டையிட்டுக்கொள்கிறீர்கள், உங்களில் யார் பெரியவன்—யார் சிறியவன் நானே எல்லோருக்கும் பெரியவன், என் முன்னிலையில் நீங்களும் மற்றனைவரும் சமமே, இது உங்கள் சிறுமதியால் ஏற்பட்ட சிறுமை, இனிமேல் இந்தவிதமான சண்டைகளில் ஈடுபட்டுச் சீரழியாதீர்கள்" என்று தணிவு கூறியிருக்கலாம். இதுவே, சிவஇலக்கணம் கூறுகின்ற [illegible] சிவனுக்கு இருக்கவேண்டிய இயல்பாய் அமைந்திருக்கவேண்டும். ஆனால், சிவன் என்ற பெயரோடுள்ள [illegible] ஒன்று எங்காவது இருந்தால்தானே, நாம்மேலே கூறியபடி செய்யமுடிந்திருக்கும். அல்லது அப்படியொன்று இருப்பதாக வைத்துக்கொண்டாலும், அந்தப் பொருள் சிவ இலக்கணம் கூறுகின்ற முறையில், எண் குணங்கள் படைத்த ஒன்றாய் இருக்கிறதென்று கூறுவதற்கும் இல்லை. ஏனென்றால், இக்கதையிற் பேசப்படும் சிவன், தன் முனைப்பு ஒன்றை மட்டுமே தமது உரிமையான உடைமையாகக் கொண்டிருந்தார் என்பது கதையின்போக்கால் நன்கு தெரிகின்றது. எப்படியென்றால், அடிமுடி தேடிய இருவராலுமே கண்டுபிடிக்க முடியாதபடி, 'என்னையார் கண்டுபிடிக்கவல்லார்' என்றதன் முனைப்போடு அடியார்க்கெளியவனாகப் பேசப்படும் அந்த அம்பலவாணன் நின்றிருக்கிறார். அந்தநிலை, "தன் முனைப்பு என்பது எனக்குமட்டுமே உரிமையான உடைமை, அதனை நீங்கள் மேற்கொண்டது தவறு" என்று கூறுவதுபோல் இருக்கிறது. வேண்டுவார் வேண்டியதை ஈயும் இயல்புடைய அடியார்க்கெளிய சிவன், அவ்விருவருக்கும் காட்சியளித்து, அவர்களுக்கேற்பட்ட தன்முனைப்பை ஒழித்துத் தம் அருளை இருவருக்கும் சமமாக வழங்குவதைவிட்டு, ஒருவர்மீது உவப்பும் மற்றவர்மீது உவர்ப்பும் கொள்வதுதான் முறையா? முறையானால், சிவனுக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களை மாற்றிவேறு இலக்கணம் வகுத்து, 'இதுவே எங்கள் சிவனுடைய இலக்கண'மென்று இயம்பவேண்டும்.

'இதுதான் எங்கள் சிவனுடைய இலக்கணம்' என்றெடுத்துக்காட்டிக் கூறுவதற்குக் கருவி எங்குளது? சிவன் யாருக்குரியவன் என்பதுபற்றிய வழக்கே இன்னுஞ் சைவத்தமிழ்ப்புலவர்கட்கிடையே தீர்ந்தபாடில்லை. சிவன் என்ற சொல் தமிழுமல்ல, அக்கடவுள் தமிழ்மக்களுக்கு உரியவருமல்ல என்று ஒரு புலவர் கூறுகிறார். இன்னொருவர் அச்சொல் தமிழே என்றும் அக்கடவுள் தமிழர்க்குரிய கடவுளே என்றும் கூறுகிறார். 'சிவன்' என்ற சொல் தமிழ்நாட்டில் வழங்கத்தொடங்கிப்பல நூற்றாண்டுகள் கழிந்துபோன இன்றைய நிலையிலும் அச்சொல் எம்மொழிக்குரியது? அச்சொல் குறிக்கும் கடவுள் யாருக்குரியவர்? என்பதிலேயே வழக்காடிக்கொண்டிருக்கும் புலவர்குழாங்களை நோக்கி, நீங்கள் கூறும் சிவனுக்கு இலக்கணம் யாது? என்று கேட்பதே தவறல்லவா! என்றாலும், ஒரு சில புலவரால் வகுக்கப்பட்ட சிவ இலக்கணங்கள் இன்றும் நம்மவரிடையே நிலவி நின்று, நம்மவரிற் சிலரை அச்சிவ வழிபாட்டுக்குரியவர்களாக்கிக் கொண்டிருப்பதையும், அதனால் நம்மவர்களின் அறிவும் பொருளும் அழிந்து பாழ்படுவதையும் நோக்கும்போதுதான், அத்தகைய ஒரு கடவுள் நமக்கு (தமிழ்மக்களுக்கு) வேண்டியதில்லையென்றும், அதனால் நாம் (தமிழர்கள்) அடைந்த—அடைகின்ற—அடையப்போகின்ற பயன் யாதும் இல்லையென்றும் பகுத்தறிவாளர் கூறுகின்றனர். இக்கூற்றுப் பகுத்தறிவாளர் வாயிலிருந்து வெளிப்பட்டால், அவர்களுக்கு நாத்திகப்பட்டம் சூட்டப்படுகிறது; ஆனால் இதே கருத்தை ஒருபுலவர் என்று கருதப்படுபவர் கூறுவாரானால், அவருக்கு ஆத்திகப்பட்டம் சூட்டப்படுகிறது. இவ்விரங்கத்தக்க நிலையை இத்தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் காணமுடியாது; இதுமட்டுமல்ல, இத்தகைய தகராறோடு கூடிய ஒரு கடவுளையும் வேறெந்த நாட்டிலும் காணமுடியாது. எனவே, இத்தகைய இழிவும்—இரங்கத்தக்கதுமான நிலைமாறி ஒருபுது அமைப்பு உண்டாக வேண்டுமென்பதே எம் போன்றோரின் (பகுத்தறிவாளரின்) உண்மையான நோக்கமாகும் என்பதை இனிமேலாவது, எம்மையும் எமது கருத்துக்களையும் கடிந்துஒதுங்கி நிற்பவர்கள் உணரவேண்டுகிறேன்.

இனித், 'தீமை செய்கின்றவர்களை அழிப்பதே சிவஇயல்பென்பதைக் காட்டச் சம்பந்தர் தமது பத்தாவதுபாடலில் புத்தசமணர்களைக் குறிப்பிட்டார்' என்ற பகுதியையும் ஆராய்வாம். தீமை செய்பவர்கட்கும் நன்மையே செய்வார் சிவன் என்பது சிவ இலக்கணம் கூறும் உண்மை. ஆனால், இங்கு சமணர்களைத் தீமை செய்பவர்களாக்கி அவர்களை அழிப்பதற்காகச் சிவன் சம்பந்தர் என்பாரைச் சிவபாத விருதயருக்குப் புதல்வனாய்ப் பிறக்கும்படி அருள் புரிந்தார் என்று பெரியபுராணமே கூறுகின்றது. இது சிவ இலக்கணத்திற்கு மாறுபட்டதென்பது ஒருபுறமிருக்கச், சமணர்கள், சிவனுக்கோ, சைவசமயத்திற்கோ அன்றிச் சைவருக்கோ செய்த தீமை என்ன? சைவர்கள் சமணர்களைக் கழுவில் ஏற்றியது போன்ற கொடுமை யாதாயினும் சமணர்களால் செய்யப்பட்டனவா? சமணத்தை ஒழிப்பதற்குச் சைவர் தவங்கிடந்தது போல் சமணர்கள், சைவத்தை ஒழிப்பதற்குத் தவங்கிடந்தனரா? சமண்பெண்களைக் கற்பழிக்கச் சைவர் சிவனாரின் அருளை வேண்டி நின்றதுபோல், சமணர்கள் சைவப்பெண்களைக் கற்பழிக்க முயன்றனரா? ஒன்றுமில்லையே; பின், அவர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

சிக்கலான பிரச்னை!

11ம் பக்கத் தொடர்ச்சி.

"இன்னொருவாக்குமூலம் கேள். தர்மதுரையே! மகாலிங்கம், மகாயோக்யனுங்க. பெரியகுடும்பம். பிழைப்புக்காக, யார் காலால்இட்டவேலையையும் தலையால்செய்பவனுங்க என்மகன். அவன் சின்னவயசிலிருந்தே யோக்யனுங்க. கஷ்டஜீவனம். அந்தக் கஷ்டஜீவனத்திலேயும், பசிஎன்று சொல்லியாராவது வந்துவிட்டாபோதுங்க, தன்வயிற்றுக்குப்போதாவிட்டாலும் பரவாயில்லை என்றுசொல்லி, அவர்களுக்குச் சோறு போடுவானுங்க. கெட்டநினைப்பேகிடையாதுங்க. அவனை நீங்ககாப்பாற்றாமே போனா, நாலுகுழந்தையோடு அவன் பெண்ஜாதி நடுத்தெருவிலே நிற்கும். நானும் அப்படித்தான். வயசு அறுபதுக்குமேலே 'ஆகுதுங்க'' என்றுகூறி என்காலில்விழுந்துஅழுதாள், மகாலிங்கத்தின்தாய். அவள் வாக்குமூலத்திலிருந்து மகாலிங்கம், சாது, யோக்யன், அன்புகாட்டுபவன் என்று ஏற்படுகிறது. ஆனால் வழக்கோ விளக்கமாகஇருக்கிறது; அவன் கள்ளன், அவனேகுற்றத்தை ஒப்புக்கொண்டுமிருக்கிறான். இப்படிப்பட்ட யோக்யன் ஏன் அயோக்யனானான்!'' என்று மருதவாணர்கேட்டார். "எனக்குத் தலைசுழலுகிறது இதைக்கேட்கக்கேட்க'' என்றுநான்சொன்னேன், உண்மையாகவே எனக்குஅப்படித்தான்இருந்தது.

"நம்மவீட்டுத் தோட்டக்காரன் இருக்கிறானே துரைசாமி, அவன் சொன்னதோ இதைவிடஅதிகம். மகாலிங்கம், எப்போதும் ஏழைகளுக்கு உதவிசெய்வானாம். யாராவதுவீதியிலே, தூக்கமுடியாமல் பாரமானமூட்டையைவைத்துக்கொண்டு கஷ்டப்பட்டால் அவன்தான், உதவிக்குவருவானாம். போக்கிரிஎவனாவது யாரிடமாவது வம்புக்குப்போனால், இவன்போய்ச் சமாதானம்செய்வானாம், அந்தப்போக்கிரி அடித்தால்கூடப் பட்டுக்கொள்வானாம். அனாதைகள் இருந்தால், வீடுவீடாகப்பிடி சோறுஎடுத்து, அவர்களுக்கு உணவளிப்பானாம். ஒரு தடவை, நம்மதோட்டத்திலே தேங்காய் திருடிவிட்டானாம் எவனோ, மகாலிங்கந்தான் திருடினான் என்று நினைத்துக்கொண்டு, துரைசாமி, மகாலிங்கத்தைச் சண்டைக்கு இழுத்துப்பலமாக அடித்துவிட்டானாம். மகாலிங்கம் அவ்வளவு அடியும்பட்டுக்கொண்டு, சத்தியமாக நான் திருடவில்லை என்று சொன்னானாம். கடைசியில் திருடன்வேறு ஒருவன்என்று தெரிந்ததாம். நம்மதுரைசாமிக்கு மனந்தாளாமல், மகாலிங்கத்திடம்போய் மன்னிப்புக்கேட்டானாம். "இது என்ன பிரமாதம்! என்னமோ விஷக்கடிவேளை.'' என்று மகாலிங்கம் பொறுமையாகப் பேசினானாம். அப்படிப்பட்ட பொறுமைசாலியை நான் கண்டதேகிடையாதுங்க. ரொம்பயோக்யன். எப்போதாவது, அதிகக்கஷ்டமானவேலைசெய்தால், குடிப்பான். ஆனால் குடித்துவிட்டுக் கூத்தாடுகிறவனுமல்ல. என்கையிலே பணம் ஏராளமாகஇருந்தால், ஏழைகளுக்கெல்லாம் உபகாரம்செய்வேன். நான் இல்லாதவன். என்னசெய்வது என்று ஏக்கப்படுவானாம் மகாலிங்கம்'' என்று கூறினார் மாஜிஸ்ட்ரேட்.

"ஐயோ பாவம்! இப்படிப்பட்டவனுக்குஏன் கெட்டஎண்ணம்பிறந்தது'' என்று நான் பரிதாபத்துடன் துரைசாமி சொன்னான் என்று கேட்டேன்.

"அதைஏன்கேட்கிறாய்! அதைச்சொன்னால், நீ மூர்ச்சையாக்கி விடுவாய், எங்கெங்கு விசாரம் இருந்ததோ அங்கெல்லாம் மகாலிங்கம் முன்னாலே நின்று உதவி செய்வான். நோயாளிக்கு மருந்து வாங்கித்தருவான். ஏழையின் வீடு இடிந்தால், இவன் கூலி இல்லாமல், வெறும் கூழுக்கே வேலை செய்வான், குழந்தை ஏதாவது தவறிவந்துவிட்டது என்றால், வீடுகண்டுபிடித்துக்கொண்டு போய்ச் சேர்க்கிறவரையிலே, வேறு வேலையைக் கவனிக்கமாட்டான். இப்படி மற்றவர்களுக்கு உதவி செய்வதிலேயேகண்ணுங்கருத்துமாக இருந்ததால் அவனுக்குக் கிடைக்கும் வேலையும் நிலைப்பதில்லை; பரோபகாரி வருகிறார், இவருக்கு வேலை வெட்டி எதற்கு? என்றுகண்டித்துஅனுப்பிவிடுவார்கள். குடும்பமோ பெரிது. அதை நடத்திக்கொண்டு போவதே சிரமம். தன் சக்தியையும் உணராமல் உதவி செய்யும் சுபாவம். அதற்குவேறு செலவு. இந்தநிலையிலே, நடந்திருக்கிறது இவன் வாழ்க்கை. இச்சமயத்திலே, இவன் அதிருஷ்டச்சீட்டுக் கட்டியிருந்தான். அதிலே நூறுரூபாய் கிடைத்தது. ஆனந்தமடைந்தான். கடன்தீரும், குடும்பத்துக்குச்சௌகரியமாகும், மற்றவர்களுக்கு உதவிசெய்யவும் முடியும் என்று மகிழ்ந்தான். அழுக்குஉடையும், தலைவிரி கோலத்துடனும், தள்ளாடி நடந்துகொண்டு, யாரோ ஒருவன், மகாலிங்கத்திடம் வந்துசேர்ந்தான் சனியன்போல. அவனுடைய நிலைமையைக்கண்டதும், மகாலிங்கத்தின் மனம் பாகாக உருகிவிட்டது. "ஐயோ! சாப்பிட்டுஎத்தனை நாளாயிற்றோ? பார்க்கவே பரிதாபமாக இருக்கிறதே.'' என்றுசொல்லித், தன்வீட்டுக்குஅழைத்துக்கொண்டு போயிருக்கிறான். அவன் தண்டச்சோற்றைத்தாராளமாக தின்றுவிட்டு, "ஐயா! நான் பர்மாவிலிருந்து கால்நடையாக வந்தவன். ரங்கூனில் பெரியவியாபாரி. போராதவேளையால் இந்தக்கோலம்வந்தது'' என்று தன்கதையைக் கூறலானான். பர்மாவிலிருந்து பயங்கரமான ஆபத்துக்குள்ளாகிப் பல மக்கள் வதைபட்டதை மகாலிங்கம் ஏற்கனவே கேள்விப்பட்டவன். பத்துநாள் அன்னாகாரம் இல்லாமல் அவதிப்பட்டவர்கள்! பாம்புகடித்துஇறந்தவர்கள்பாழுக்குப்பலியானவர்கள்! காட்டுஜாதியாரால் கொலையுண்டவர்கள்! என்றுபல சோகச்சேதிகளைக் கேட்டிருந்தான். ஆகவே, பர்மாவிலிருந்துவந்தேன் என்று சொன்னஉடனே மகாலிங்கத்துக்குக் கண்களிலே நீர் ததும்பிற்று.

வந்தவன், "என்குடும்பம் அடியோடு நாசமாகிவிட்டதப்பா!'' என்றான். மகாலிங்கம் அழுதுவிட்டான். "எப்படியோ நான்வந்து சேர்ந்தேன். திக்கு இல்லை திசைதெரியவில்லை, நீகிடைத்தாய்பழனியாண்டவர்போல'' என்று சொல்லிக்கும்பிட்டான்.'' "ஐயோ! பெரியவங்க நீங்க. இந்தப்பஞ்சைப்பயலைக் கும்பிடக்கூடாதுங்க. நான் என்ன பிரமாதமான உதவி செய்துவிட்டேன் உங்களுக்கு'' என்று மகாலிங்கம் கூறினான். அப்போதுதான், வந்தவன், மெதுவாக மடியிலிருந்து, சங்கிலியை எடுத்தான். "அப்பா இது மூணு சவரன். இதை விற்கவேண்டும். விற்றால் நான், ஊர், போய்ச்சேர்ந்து ஏதாவது கடைவைத்துக்கொண்டு பிழைப்பேன். இந்த ஊருக்கோ நான் புதியவன். கடைவீதிக்கு கையை எடுத்துக்கொண்டுபோனால், சுலபத்திலே வாங்கமாட்டார்கள். அதிலும் நான்இருக்கிற அலங்கோலத்தைக்கண்டால், இதுதிருட்டுச்சொத்தோ என்றுகூடச்சந்தேகப்படுவார்கள். ஆகையினால் எனக்கொரு உபகாரம்செய். இது மூன்றுசவரன். இன்றைய விலையிலேஇருநூறு ரூபாதாளும். எனக்கு ஒரு நூறு ரூபாய் கொடுபோதும். சங்கிலியை நீ எடுத்துக்கொள் என்று கெஞ்சினான். மகாலிங்கம் மறுக்கவில்லை. அதிர்ஷ்டச்சீட்டுப்பணத்தைஅப்படியே அந்தப்பர்மா அகதிக்குக்கொடுத்தனுப்பிவிட்டான். அந்தச்சங்கலியைத்தான் பிறகு, மார்வாடி கடையிலே விற்கவந்தான், பிடிபட்டான். இது, மகாலிங்கத்தின் மனைவி, தன் நாலுமக்களோடு என் காலிலே விழுந்து சொன்ன வாக்குமூலம் என்றார். நான் சந்தோஷத்தால் துள்ளிக்குதித்து, "இந்த வாக்குமூலத்தைக்கொண்டே, மகாலிங்கத்தை விடுவித்துவிடலாமே'' என்று சொன்னேன். மருதவாணர்சிரித்துக்கொண்டே "குற்றவாளியின் மனைவியின் வாக்குமூலத்தைக்கொண்டே எப்படித்தீர்ப்பளிக்க முடியும்? சட்டம் இடந்தராதே.மேலும்பர்மா அகதியாக நடித்தவன்யார் என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல, முலாம்பூசுவதற்கானசாமான்கள், மகாலிங்கத்தின் வீட்டிலேயிருந்து போலீசார் கண்டுபிடித்து எடுத்திருக்கிறார்கள்.'' என்று கூறினார். "அந்தப்பர்மாஅகதியாகவந்தபுரட்டனே, முலாம்பூசும் சாமானை அங்கே வைத்திருப்பான்'' என்று நான் கூறினேன். "இருக்கலாம்! ருஜு? ருஜுவேண்டுமே! மகாலிங்கம் நிரந்தரமான தொழிலற்றவன். அவன் முலாம்பூசிய நகையைவிற்க முயற்சித்தான். அதை அவனே ஒப்புக்கொள்கிறான். அவன் வீட்டிலே முலாம் போடும் கருவிகிடைத்தது. தண்டனைக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

பார்வதி பி.ஏ.,

4-ம் பக்கத் தொடர்ச்சி.

உலவுவதையும், கள்ளர்கள் காவி உடையிலே இருப்பதையும் கண்டு பண்டாரக் கூட்டத்தின் புரட்டுகளை அடக்கிப்பழக்கப்பட்ட போலீசார். எனவே அவர்களுக்குப் பார்த்திபனுடைய ஆவேசச் சொற்பொழிவு, கேட்கக் கேட்க ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால் கமிஷனரின் உத்தரவு கடுமையானது பண்டாரக் கோலத்திலே இருந்த பிரமநாயகம், எதை எந்தநேரத்தில் எப்படிச் செய்யச்சொல்கிறாரோ அதுபோல் செய்யவேண்டும்; அவசரப்பட்டு நீங்களாக எதுவும்செய்துவிடக்கூடாது, என்று கமிஷனர் உத்தரவிட்டிருந்தார். ஆகையினால் அவர்கள் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டிருந்தனர். "ஆண்டிப்பயல்கள் நமது பேச்சினால் மயக்கம் கொண்டவர்களாகிவிட்டனர்" என்று எண்ணிக்கொண்டு பார்த்திபன் மேலும் பேசலானான்.

"ஆண்டிகளே! உங்களை நான் இன்று அழைத்தது விருந்தளிக்க. விருந்துகாணோம், ஏதோ வீண்பேச்சு நடக்கிறதே என்று நீங்கள் வியாகூலப்படுகிறீர்கள்! கவலை வேண்டாம். இன்றுமட்டுமல்ல, இனி என்னோடு எவ்வளவுகாலம் இருந்தாலும் உங்களுக்கு விருந்து உண்டு. விளையாட்டு அல்ல! உங்களுக்கு என்னுடைய தபோவனத்திலே, அருமையான விருந்தளிக்கிறேன். அந்தத்தபோவனம் எங்கே இருக்கிறது என்றுஎன்னைக்கேட்கிறீர்களா? நீங்களே அந்தவனத்தைக்காணத்தான்போகிறீர்கள்! வழி தெரியக்காணோமே என்று வாடுகிறீர்களா? பாபம்! நான்காட்டுகிறேன்வழி வாருங்கள்" என்றுகூறிக்கொண்டு, அவர்களை ஆரண்யத்திலே இருந்த ஆலயத்துக்கு அழைத்துச்சென்று முன்பக்கத்திலேஇருந்தபிரம்மாண்டமான நந்தியருகே அவர்களை இருக்கச் செய்து,

"இங்கேதங்கி இறைவனைத் தொழுதபடி இருங்கள். நான் உள்ளே சென்று தேவனிடம் முறையிடுவேன். அவர் உள்ளம்கனிந்து, வழிவிடுமாறு நந்திக்கு உத்தரவிடுவார். நந்தி விலகிநின்று நாம் போய்ச்சேரவேண்டிய தபோவனத்திற்கானவழி தெரியச் செய்யும்"

ஆண்டிக்கோலத்திலேஇருந்த போலீசாருக்கு, "இவன்யாரோ தெரியவில்லை, புரட்டுக்காரன் என்று நாம்நினைத்தோம், இவன் பேசுவதைப்பார்த்தால், இவன் புரட்டனல்ல, யாரோ ஒரு பைத்தியக்காரன்என்று தோன்றுகிறது. தபோவனமாம், அதற்கு நந்திவழி காட்டுமாம், சுத்தப்பைத்தியக்காரப்பயல், இவனைப்பிடிக்கவா கமிஷனரும், பிரபல பிரமநாயகமும் ஆயிரம்பேர்களை அழைத்துக்கொண்டு வரவேண்டும், காதைத் திருகிக் கன்னத்தில் ஒருஅறை கொடுத்தால்பயல் சுருண்டுவிடுவான் கீழே. இவனுக்காக இவ்வளவுபேரின் வேலை நேரம் வீணாவதா?என்று நினைத்தனர். பண்டாரவேடமணிந்திருந்தபிரமநாயகமோ, பணிவுடன்; பார்த்திபனிடம்சென்று "தேவன் அருள் பெற்ற குருநாதா, நந்திவிலகி வழிவிடும் என்று தாங்கள்கூறிய மொழியை இந்த ஆண்டிகள் நம்பவில்லை. நீங்கள்விளையாடுகிறீர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் நான் அறிவேன்" தங்கள் தபோபலத்தை என்று கூறினான்.

பார்த்திபன், நந்திக்கருகே கூட்டத்தை இருக்கச்சொல்லிவிட்டுக், கோவிலுக்குள்ளே மூலஸ்தானம் சென்றான் தேவனைத்தொழ. போகுமுன், அனைவரும் அரகர சிவ, சிவ, என்றுபஜித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டான். ஆண்டிகளின் அரகர சிவ சிவ சத்தம் அரனையும், செவிடனாக்கிவிடும் போலிருந்தது. உள்ளே ஓடினான் பார்த்திபன், ஐந்துநிமஷங்களாயின அரகர சிவ சிவாஎன்று பஜித்தபடி, அனைவரும் நந்தியையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர், அடுத்த நிமஷத்திலே ஆச்சரியசம்பவம் நடைபெற்றது. பார்த்திபன்கூறியபடியே நந்திவிலகிற்று, (தொடரும்.)

—————:(o):—————

சிக்கலான பிரச்னை!

9-ம் பக்கத் தொடர்ச்சி.

ஏற்றபடி ருஜுக்கள் உள்ளனவே, நான் என்ன செய்வது?" என்று கேட்டார்.

"சிக்கலான பிரச்னைதான்!" என்று மட்டுமே என்னால் சொல்லமுடிந்தது. நானா, தீர்ப்பளிக்க வேண்டியவன்! என் தீர்ப்பு நெடுநாட்களுக்கு முன்பே பதிவாகிவிட்டது, ஒருவழக்குக்கு மட்டுமல்ல, பொதுவாகவே. அதாவது, ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக்காரணம் அவர்களின் ஏழ்மை. ஆகவே தண்டிக்கப்படவேண்டியது ஆட்களல்ல, பொருளாதார பேத அமைப்பு முறை. இது என் தீர்ப்பு. ஆனால் மாஜிஸ்ட்ரேட் மருதவாணம்பிள்ளை, சட்டப்படி, இந்த மகாலிங்கம் வழக்கிலே, என்ன தீர்ப்பு அளிப்பது என்று கேட்கிறார்! சொல்லுங்கள்பார்ப்போம்!!

எது சைவம்?

3-ம் பக்கத் தொடர்ச்சி.

மின்றிக் கூறியிருப்பார்களா? சின்னஞ்சிறுவனாய் இருந்தாலும், அவனுக்குச் சிவஅருள் கிடைத்துவிடுமானால், பாட்டும் பாடுவான், பகைவர்களையும் வெல்லுவான், என்ற மயக்க உணர்வை மக்களுக்கு ஊட்டுவதன் வாயிலாகத் தங்கள் கொள்கையை நிலைநிறுத்தவே இவ்வாறெல்லாம் எழுதிவைக்கும்படி நேரிட்டது. எழுத்தெண்ணிக்கற்று இலக்கணவரம்பைக்கண்ட இக்கால அறிவுப்புலவர்கள்கூட அமைத்துக்கட்டிப் பாடமுடியாத முறையிலுள்ள ஒருபாடலை, மழலைமொழிச்சிறுவன் ஒருவன் மடமடவென்றுபாடித்தள்ளினான் ஆயிரக்கணக்கில் என்று எழுதி வைத்தார்கள் என்றால், அக்காலத் தமிழ்மக்கள் எத்துணைஏமாந்த இயல்பினராய் இருந்திருக்க வேண்டும் என்பதுதானே இதனால் புலனாகின்றது.

ஆனால், இந்த ஏமாந்த இயல்பு மக்களிடத்தில் எக்காலத்திலும் நிலைத்திருக்குமா? மக்களின் கருத்தில் காலவேகம்மாறுதலை உண்டாக்காதா? ஒன்றைப்பற்றி ஒருஇடத்தில் ஒருவிதமாகவும் இன்னொருஇடத்தில் இன்னொரு விதமாகவும் எழுதிவைத்தவைகளை ஓரிடத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தி எடைபோட்டுப்பார்க்கமாட்டார்களா? என்றெல்லாம் எண்ணிப்பார்த்து ஒன்றை நிலைநிறுத்த முடியாத அத்துணை ஏமாந்தநிலையிலேயே அக்கால மதத்தலைவர்களும் இருந்திருக்கின்றனர் என்பதும் நன்குதெரியக்கிடக்கின்றது. யாம்கூறும் இக்கூற்றலுக்குச் சான்றுதேடவேறெங்கும் போகவேண்டியதில்லை. சம்பந்தர் பாடியதாகச்சொல்லப்படும் "தோடுடைய செவியன்"என்ற பாடலிலேயே இதற்குச் சான்றுகள் உள்ளன. அவற்றை இங்குதருகிறேன், கண்டு தெளியுங்கள். சிவனுக்கு வடிவம் எதுவும் இல்லை என்றார் ஒருவர். சிவனுக்கு வடிவம் உண்டென்றார் இன்னொருவர். வடிவமும் வடிவமின்மையும் உண்டென்றார் வேறொருவர். சிவனுக்குக் குணம் குறி எதுவும் இல்லையென்றார் மற்றொரு

(5ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்.

செங்கற்பட் ஜில்லாபோர்ட் மானேஜ்மெண்டுக்கு உட்பட்ட எல்லா லோகல்பண்டுகிராம ஆஸ்பத்திரிகளுக்கும் (1945—46) தயார்செய்யப்பட்ட இந்தியன்—சித்த—ஆயுர்வேதயூனனி மருந்துகள் கொடுக்கக் கூடியவர்கள், தங்கள் டெண்டர்களைச் செங்கற்பட் ஜில்லாபோர்ட் ஆபீஸ், சைதாப்பேட்டை என்ற விலாசத்துக்கு 25—1—45க்குள் சீல் வைத்த கவரில் அனுப்பிவைக்கவும். டெண்டர்பாரம் ஜில்லாபோர்ட் ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம்.

செங்கற்பட் ஜில்லாபோர்ட் ஆபீஸ்
சைதாப்பேட்டை
16-1-1945

T. சண்முகம்,
தலைவர்.

சிக்கலான பிரச்னை!

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கிலியையும் காட்டினான். நான் இம்மாதிரி திருட்டுக்காரியத்துக்குஉடந்தையாக இருக்கமுடியாதென்று சொல்லிவிட்டேன்.”

308ம் நம்பர் கான்ஸ்டெபிள், “சேட் வந்தழைத்ததும், நான் கடைக்குப்போனேன். என்னைப்பார்த்தஉடனே இவன் முகத்திலே பயம்வந்துவிட்டது. ஏதடா சங்கலி என்றுகேட்டேன். “பதில்சொல்லாமல் மரம்போலிருந்தான். இதற்குள் சேட், உரைத்துப்பார்த்து, ‘அரேரே! இதுபொன் இல்லை,பித்தளை’ என்றுசொன்னார். உடனேஇவனைலாக்கப்செய்தேன்” இப்படியே சாட்சியங்கள்உள்ளன-என்று மருதவாணர் கூறிவிட்டு, ஆயாசத்தோடு இருந்தார். இவ்வளவுவெள்ளையாகவழக்கு இருக்க இவர் என் வேதனைப்படுகிறார் என்பது விளங்கவில்லை எனக்கு.

“சரியானபடி சிக்கிக்கொண்டிருக்கிறான். இனிஎன்ன இருக்கிறதுநான்கூற” என்று சொன்னேன்.

* * * *

“எனக்கோ கடுமையான ஜுரம்! வைத்தியர்கூடமிரண்டுவிட்டார். மார்புச்சளி அதிகமாக இருக்கிறது, சுவாசம் வருவதுகூடச் சிரமமாக இருக்கிறது என்று கூறினார். என்மனைவிஎன்னசெய்வாள்? அவள்மேலே, ஒருநகையும் கிடையாது. இருந்தது ஒருவளையல், அதுபோனமாதம்தீர்ந்துவிட்டது. வீட்டிலேபாத்திரங்கள் கூடக்கிடையாது. இந்த நிலையிலே, பத்துரூபாயாகும் ஊசிபோட என்றுடாக்டர் கூறிவிட்டார். கையிலே பணம் வந்தாகவேண்டும்என்றார். நிர்க்கதியாகவிடப்பட்டநான், பிராணவஸ்தையிலே இருப்பதைஎடுத்துச்சொல்லி, நான்வண்டியோட்டும், முதலாளியிடம் போய் அழுதாள் என்மனைவி. பத்துநாளாகப்படுத்தபடுக்கையாக்இருக்கிறேனே பாதிப்பிராணன் போய்விட்டதேஎன்று ஈவுஇரக்கம்கொஞ்சமும் இன்றி, அந்தக்கொலைகாரப்பாதகன், ஒருகாசுகூடத்தரமுடியாது அவன்ஏற்கனவே ஆறு ரூபாய்பாக்கி என்றுகூறிவிட்டான். மாங்கலியப்பிச்சை தரவேண்டும் என்று என் மனைவிகேட்டாளாம், அதற்குக்கோபில் சுற்று என்று சொல்லித்துரத்திவிட்டானாம்! மாடாகஉழைத்தேன்,எனக்குஉயிர் போகிறதுஎன்றால் பத்துரூபாய்தரமறுத்துவிட்டான். இப்படிப்பட்ட கன்னெஞ்சர்கள் வாழ்கிறார்கள், கஷ்டாளிகள்கால் வயற்றுக்குக்காலமுழுதும் உழைக்கிறார்கள், சரி, சாகவேண்டியதுதான் என்று எண்ணி ஏங்கினேன். நான்மாண்டுபோனால் மங்காவின்கதிஎன்னாகும்? என்ரங்கன் நாலுவயதுப்பையன், அவன் தெருவிலே அலைவான். இந்தஇலட்சணத்திலே அவள் எட்டாம்மாதம்! இந்தஉலகிலே, என்னைக்காப்பாற்ற, மரணத்திலிருந்து என்னைத்தப்பவைக்கயாரும் இல்லை. மங்கா அழுதவள் அழுதபடியே இருந்தாள். அந்தநேரத்திலே, புண்யமூர்த்தி மகாலிங்கம்வந்தான். அவன் பூர்ணாயுசுடன்நோய்நொடியின்றி வாழவேண்டும். என்நிலைமையைக்கண்டதும், கோவெனக் கதறினான். வாதா! உனக்கு இவ்வளவு அதிகமாக ஜுரம் என்று எனக்குத்தெரியாமல் போச்சே-என்று விசனித்தான். “அக்கா! அழாதே ஆண்டவன் நல்லவழி காட்டுவார்” என்று என்மனைவிக்குத் தேறுதல்கூறினான். அவனுடைய அன்பு எனக்கு ஆயிரம டாக்டர்களின் உதவியைவிட மேலானதாக இருந்தது. உயிருக்குஊசலாடிக்கொண்டு, ஊரிலே ஒருவர்உதவியின்றி, வேலைசெய்துவந்தஇடத்திலேகைவிடப்பட்டஇந்தத்தர்மக்கட்டையிடம் தயைகாட்டி, ஆறுதல்கூறினான், அவனுடைய தர்மசிந்தனையைப்பார்த்தபோது, கைதூக்கிக்கும்பிட்டேன். அதுவரையிலே அடக்கிவைத்திருந்த ஆத்திரத்தைக்காட்டினாள், என்மனைவி.

“ஆண்டவன் எனக்கு என்ன வழியப்பா காட்டப்போகிறார்? ஆண்டவன் இருக்கிறானா? எங்கேஇருக்கிறான்!இதோ என்புருஷர் வதைகிறார். கண்ணைத்திறக்கிறேன் கலம் தண்ணீர்விடுகிறேன். தெய்வம் என்னசெய்கிறது? தெருவிலேஏழைகளை அலையவைக்கிறது. தெய்வமாம்தெய்வம்! திக்கற்றவர்களுக்குத்தெய்வம்துணை என்பது பாட்டிகதை.” என்று அழுதுகொண்டே கூறினாள்.

“அழாதே அக்கா! ஆண்டவன் இருந்துதான், என்னைஇங்கே அனுப்பிவைத்தார்” என்று சொன்னான் அந்தச்சாந்தமூர்த்தி. “ஆமாம்! உன்னைப்போல, ஈரமுள்ளநெஞ்சுகொண்டவர்கள்வந்துதான் ஆண்டவனின் மானத்தைக்காப்பாற்ற வேண்டிஇருக்கிறது” என்று அவள் பதறிப்பேசினாள். பத்துரூபாய் கேட்கிறார் டாக்டர் என்பதைக்கூறினாள். பத்துரூபாய் என்றதும் பாவம், மகாலிங்கம், பயந்துபோனான். அவனிடம் ஏது அவ்வளவு பணம்? அவன் என்னைப்போல் ஒருஏழை. எனக்காவது ஒருகுழந்தை, அவனுக்கு நாலு. எனக்கு ஒருஇடம் இருந்து வேலைசெய்ய அவனுக்கோ ஒருவேலையும் நிலையாக இருப்பதில்லை. நோயாளிமனைவி. வயதானதாய். வருமானம் கட்டை. இந்த [illegible]ட்சணத்திலே பத்து ரூபாய்தர முடியுமா அவனுக்கு? “அப்பா! நீபக்கத்திலே இருந்தாலேபோதும், பத்துஆயிரம் கொடுத்தமாதிரிதான். என்பிராணன்போகிறசமயத்திலே, உன்னைப்போன்றஒருஉத்தமச்சிநேகிதன்பக்கத்திலே இருந்தால், அதுவே என்மரணவேதனையைக்குறைக்கும் என்றுநான் ஈனக்குரலிலே கூறினேன். எழுந்தான் “இதோ வருகிறேன்” என்றான். வெளியேபோனான்.வேதனையைக் காணச்சகியாமல் வெளியே போனான் என்று நான்நினைத்தேன். அரைமணிநேரத்திற்கெல்லாம், டாக்டருடன்வந்தான். ஊசிபோட்டார், என்னைப்பணம்கேட்கவில்லை. அதிலிருந்து ஜுரம் படிப்படியாகக் குறையத்தொடங்கிற்று. நான் எழுந்து நடமாடும் சக்திபெருகிறவரையிலே, ரொட்டியும் அவன்தான் வாங்கித்தந்தான். ‘ஏதுமகாலிங்கம்பணம்? என்று எத்தனையோதடவைகேட்டேன். பதிலே சொல்லவில்லை அந்தத்தர்மசீலன், தயாளமூர்த்தி, புண்யாத்மா, அவதாரபுருஷன், என்உயிரைக்காப்பாற்றினான். ஏழை, ஏழைக்குஉதவி, ஏழையே ஏழைக்குஉயிர்கொடுக்கும்தெய்வம். மகாலிங்கம், சாதாரணப்பிறப்பல்ல. அவன்தெய்வப்பிறப்பு”

இது, வண்டிக்கார வாதன் வாக்குமூலம்—கோர்ட்டில் சொன்னதல்ல. என்னிடம் நேரில் சொன்னான், காலில்விழுந்து, “எப்படியாவது அந்தக் காருண்யவானைக் காப்பாற்றவேண்டும்” என்று கெஞ்சிக்கேட்டான். உண்மையிலேயே ஒரு டாக்டருக்கு, ஒரு உயிர் போகுமே, நம்மாலானஉதவிசெய்வோம் என்ற எண்ணம் தோன்றவில்லை. நம்மிடம் நாய்போலக்கிடந்தானே, உயிருக்கே ஆபத்தாக இருக்கிறதாமே ஒரு பத்து ரூபாய் கடன் தருவோம் என்ற எண்ணம், ஒரு பணக்காரனுக்குத்தோன்றவில்லை. பாரி மகாலிங்கத்தின்மனதிலே, அவ்வளவு அன்புததும்பி இருந்தது. ஒரு உயிர் துடிப்பதைக்கண்டுஅவன் துடித்தான். ஒரு குடும்பத்தின் கண்ணீரைக்கண்டு கலங்கினான். மகாலிங்கம், யோக்யன், தர்மவான், குணசீலன், அந்த வாதன்சொன்னதுபோல அவன் தெய்வப்பிறப்பு—என்று இந்த வாக்குமூலம் ஒன்றைக்கொண்டே சொல்லிவிடலாம்.” என்று கூறிவிட்டுப்பெருமூச்செறிந்தார் மாஜிஸ்ட்ரேட். நான்ஆச்சரியத்தால் என்னையேமறந்தேன். மகாலிங்கம் எவ்வளவுபெரியகர்மயோகி! அவன்மனதிலே எவ்வளவு கருணை! அவனுடையசெயல்எவ்வளவுசிலாக்கியமானது! என்றுபுகழ்ந்தேன்.

“ஆனால் மறந்துவிடாதே, மகாலிங்கம், செய்திருக்கும்குற்றத்தை” என்று மாஜிஸ்ட்ரேட் கவனப்படுத்தினார். ஆம்! அவன் தண்டிக்கப்படவேண்டியவன்என்பதை நினைத்ததும், என்உடல் குலுங்கிற்று. இப்படிப்பட்டவனுக்குத்தண்டனை!! அவன்காட்டிய சிநேகவாஞ்சை, மனிதாபிமானம்,ஆபத்தில்உதவுதல், இவைகளுக்குப்பரிசுகிடையாதா? இவைகளைக்கவனிப்பவர்இல்லையா? இல்லை! ஏன்? அவன்திருடன்! தியாகபுருஷன் திருடனானான்! பௌர்ணமியிலே அமாவாசைஇருக்கமுடியுமா என்றுநான்கேட்டேன் பைத்யக்காரத்தனமாக! இதோ இருக்கிறதே!! கருணையைப்பொழிந்த மகாலிங்கம் களவுமாடியிருக்கிறான்!!

(9-ம் பக்கம் பார்க்க.)

விளம்பரம்.

செங்கற்பட் ஜில்லாபோர்ட் ஆபீசுக்கு (1945—46) வேண்டிய "ஸ்டேஷனரி சாமான்கள்" தயார்செய்து [illegible] விரும்புவோர், [illegible] டெண்டர்களை சீல்வைத்த கவரில் 10—2—4[illegible]க்குள் ஜில்லா போர்ட் [illegible] சைதாப்பேட்டை என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். டெண்டர் பாரமும், ஸ்டேஷனரி சாமான்களின் லிஸ்டும் மேற்படி ஆபீஸில் மனுவின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]பட் ஜில்லாபோர்ட்
சைதாப்பேட்டை
11—1—45

T. சண்முகம்
தலைவர்.

முதலிய இடங்களில் தோழர் ஆதிமூலம் தலைமையில் நடந்த கூட்டங்களில் டாக்டர் அம்பேத்காரைக் குறை கூறும் J. சிவசண்முகம்பிள்ளை போன்றோர்களை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

—

தாழ்த்தப்பட்டோர் நிலை உயர

7—1—45ல் சென்னைத் தாழ்த்தப் பட்டவர் கழகத்தின் சார்பாக பெரம்பூர் பாரக்ஸ் சாவ்வடி ஹாலில் தோழர் C. தங்கராஜ் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தபோது ஷெ கழகச் செயலாளர் தோழர் முத்து அகில இந்திய தாழ்த்தப் பட்டவர் கழகத்தின் நோக்கத்தையும், எல்லா முக்கிய நகரங்களிலும் தங்கள் குலக்கழகங்கள் அமைக்கவேண்டிய தன் அவசியத்தையும், சென்னையிலும் கல்கத்தாவிலும் தோழர் டாக்டர் அம்பேதகார அவர்கள் ஆற்றிய அரியமொழிகளை எடுத்துக்காட்டியும், தங்கள்குலத் தவர்கள் யாவரும் ஷெ கழகத்தில் ஏராளமாகச் சேர்ந்தால் பல நன்மைகள் பெறலாமென்றும், டாக்டர் அம்பேத்கார் அவர்களை எதிர்த்துப் பேசியும் குறை கூறியும், தேசியக்கட்சியைப் புகழ்ந்தும், தங்களையும் தங்கள் குலத்தவரையும் அரிஜனங்கள் என்று அழைத்தும் வருகிற தோழர்களான J. சிவசண்முகம்பிள்ளை, V. I. முனிசாமிப்பிள்ளை, சாமி சகஜானந்தா போன்றோரை கண்டித்தும்விளக்கமாகப் பேசினார்.

தோழர் V. V முருகேச பாகவதர் பேசியபின் தலைவர் முடிவுரையில் கழக அவசியத்தைப்பற்றிப் பேசினார்.

பல இடங்களிலுள்ள அங்கத்தினர்கள் சேர்ந்து தோழர் N. S தங்கருபனைச் செயலாளராகவும், தோழர் M. பெருமாளைத் துணைச்செயலாளராகவும், தோழர் தர்கயாவைப் பொருளாளராகவும் கொண்ட ஒரு கிளைக்கழகம் ஏற்படுத்தப் பட்டது.

புரசவாக்கம், வண்ணாரப்பேட்டை

அக்யாப்.

1942 மே மாதம், எதிரியிடம் சிக்கிய அக்யாப், ([illegible]) 194[illegible], ஜனவரி 3-ந்தேதி, [illegible]விட்டது. அக்யாப், பர்மாவிலுள்ள 5 பெரிய நகரங்களில் ஒன்று. அரக்கான் பகுதிக்கு இது துறைமுகம்; நெல்உற்பத்தி அதிகமுள்ள பிரதேசம். இப்போது மக்கள்நடமாட்டமின்றி, வயல்களிலே கோரை செழித்துக்கிடக்கிறது. ஜப்பானியரிடமிருந்து மீட்கப்பட்ட இந்நகரிலே இனி விவசாய வேலையும் புனரமைப்பும் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் தயாரிக்கப்படுகின்றன.

—

தலைவர் படங்கள்.

பெரியார், நெடுஞ்செழியன், டார்பிடோ, ஜனார்த்தனம், அன்பழகன் இவர்களது படங்கள் தயாரிலிருக்கிறது. ஒன்றின் விலை 0—1—0. வேண்டுவோர் எழுதுக; தக்கலாபமுண்டு. எல்லா "குடி அரசு", "திராவிட நாடு", "திராவிடமணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். கடிதம் எழுதுவோர் தங்களது முழு முகவரியை தெரிவிக்கவேண்டும்.

—

"எங்கள் பெரியார் வாழ்க!"

என்னும் அச்சில் பொறிக்கப்பட்ட ரப்பர் ஸ்டாம்பு தயாரிலிருக்கிறது: எல்லா நண்பர்களுக்கும் உபயோகப்படும். விலை 1—4—0 வேண்டுவோர் எழுதுக.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

கிளி மார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியாவெங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும், எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்! ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

ஏ. எஸ். ராஜன் கம்பெனி,
பழயவண்ணாரப்பேட்டை, சென்னை

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram